பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 14 வியாழக்கிழமை 29.06.2023 கதிர் 230

# உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்கு அமைச்சரவை வழங்கியது அனுமதி

## நேற்றைய சிறப்புக் கூட்டத்தில் முடிவு

உள்நாட்டு கடன் மறுசீரமைப்புக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி தலைமையில் நேற்று இடம் பெற்ற சிறப்பு அமைச்சரவைக் கூட்டத்தின் போதே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கை ஒக்டோபர் மாதத்திற்கு முன்னர் சர்வதேச நாடுகளுடன் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்தை செய்துகொள்ளவேண்டும்.

இதேபோல் உள்நாட்டு நிறுவனங்கள் மற்றும் வங்கிகளிடம் பெற்றுக்கொண்ட கடனை மீளச் செலுத்துவதற்கும் இந்த நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளிடம் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும்.

இலங்கை அரசு சுமார் 14 டிரில்லியன் கடன்களை உள்நாட்டு நிறுவனங்களிடம் இருந்து பெற்றுள்ளது. மத்திய வங்கி, அரச மற்றும் தனியார் வங்கிக் கட்டமைப்பு, ஊழியர்சேமலாபநிதியம்,ஊழியர்நம்பிக்கை நிதியம் மற்றும் நிறுவனங்களிடம் இந்த கடன் தொகை பெறப்பட்டுள்ளது.

இந்தக் கடன்களை எவ்வாறு திரைசேறி மீளசெலுத்தப்போகின்றது என்பது குறித்து நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தின்படி மறுசீரமைப்பு செய்துகொள்ள வேண்டியுள்ளது. இந்நிலையிலேயே, ஜனாதிபதி ☞ 2

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் அதிகாரத்திற்குப் பின் கதவால் வந்தது போன்றே எல்லாவற்றையும் பின்கதவு வழியாகவே நடத்திவிடலாம் என்று நினைக்கிறார் போலுள்ளது.போதிய நிதி இல்லை என்று தெரிவித்து நிறுத்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நிறுத்திவைத்துள்ள ஜனாதிபதி அந்தத் தேர்தலை நடத்தாமலேயே சபைகளை மீண்டும் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கின்றார்.

கலைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு மீண்டும் உயிரூட்டி அவற்றை இயங்கு நிலைக்குக் கொண்டு வருவதற்கான அதிகாரத்தை மாகாண சபைகள், உள்ளூரராட்சி சபைகள் அமைச்சருக்கு வழங்குவதற்கான சட்டத் திருத்தத்தை தனிநபர் சட்டமூலம் ஊடாகக் கொண்டு வருவதற்கான முன்முயற்சிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன.

இதற்கமையநாடாளுமன்றஉறுப்பினர் ஜயந்த கெட்டகொடவின் தனிநபர் பிரேரணை, சட்டமூலம் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தனிநபர் பிரேரணை நாடாளுமன்றத்தில் ☞ 2

## வரவேற்பு

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நாட்டின் நிதி உறுதிப்பாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது என்ற மத்திய வங்கி ஆளுநரின் அறிவிப்பை இலங்கையின் வங்கிகள் சங்கம் வரவேற்றுள்ளது.

இலங்கைவங்கிகளின்சங்கம்வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மத்தியவங்கிஆளுநர்நந்தலால்வீரசிங்கவின் அறிவிப்பு உள்நாட்டு கடன்மறுசீரமைப்பு நடவடிக்கை நிதிஸ்திரதன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தாது வங்கி மற்றும் வங்கிசாராத நிதி நிறுவனங்களில் வைப்பிடப்பட்டுள்ள பணத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தாது என்ற உறுதியான உத்தரவாதத்தை வழங்கியுள்ளார். அது வரவேற்கப்பட வேண்டியதாகும். ☞ 2

## ரணிலின் முறையற்ற செயல்களுக்கு பெரமுனவும் துணை செல்கின்றதா?

### டலஸ் அழகப் பெரும கேள்வி

ஜனாதிபதியின்முறையற்ற செயற்பாடுகளுக்கு பொது ஜன பெரமுன துணை செல்லுமா என்று சுதந்திர மக்கள் சபையின் தலைவரும்நாடாளுமன்றஉறுப்பினருமான டலஸ் அழகபெரும கேள்வி எழுப்பியுள்ளார்.

நாவலவில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இந்தக் கேள்வியை எழுப்பினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைநாடாளுமன்ற வரலாற்றில் என்றும் இடம் பெறாத சம்பவங்கள் தான் தற்போது இடம்பெறுகின்றன. நிறைவேற்றுத்துறை அதிகாரம் சட்டவாக்கத்துறையின் மேன்மையை மலினப்படுத்துகிறது.

ஆட்சியாளரின் முறையற்ற அஸ்வெசும நலன்புரி திட்டத்துக்கு எதிராக நாட்டு மக்கள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபடுகின்ற நிலையில் மக்களின் கவனத்தைதிசைதிருப்பும்வகையில் நாடாளுமன்ற அமர்வு எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. ☞ 2

## திருடர்கள் கையில் ஆட்சியை இனி ஒப்படைக்க மக்கள் தயாராயில்லை

### அனுரகுமார திஸநாயக்க தெரிவிப்பு

மக்கள், இனிமேலும் திருடர்களின் கைகளில் ஆட்சியை ஒப்படைவதற்கு தயாரில்லை. தேர்தல் ஊடாக ஆட்சிஅமைக்கவேண்டும் என்பதே மக்கள் விடுதலை முன்னணிதெரிவுசெய்துள்ள வழயென தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் பேர்த்நகரில்நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் புலம்பெயர் ஆதரவாளர்களை சந்திக்கும் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் ஊடாக ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்ற ☞ 2

## தேசிய கடன்மறுசீரமைப்பு இரண்டாவது கொள்ளையா?

### இப்படிக் கேட்கிறார் கஜேந்திரகுமார்

நாட்டை பொருளாதார ரீதியில் மீட்கப்போவதாக கூறி நடைபெறப்போகின்ற இரண்டாவது கொள்ளையா தேசிய கடன் மறுசீரமைப்பு என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ்;.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலார் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் ☞ 2

## உள்ளூராட்சி சபைகள் சட்டத் திருத்தம் தனிநபர் பிரேரணையாக முன்வைப்பு

கலைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களை மீண்டும் உருவாக்குவதற்கான அதிகாரத்தை விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கு வழங்கும் வகையில், நாடடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொடவின் தனிநபர் பிரேரணை, சட்டமூலம் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநகர சபைகள் கட்டளைச்சட்டம், மாநகரசபைகள் திருத்தச்சட்டம்மற்றும்பிரதேச சபை சட்டம் ஆகிய சட்டங்களில் உள்ளடகப்பட்டுள்ள சில சரத்துகளைதிருத்துவதற்காக இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

குறித்த சரத்துகள் திருத்தப்பட்டால் தற்போது கலைக்கப்பட்டுள்ள மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகளை விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் நிர்ணயிக்கும் கால எல்லை வரை மீண்டும் இயங்க சந்தர்ப்பம் கிடைக்கும். இந்தச் சட்டமூலம் ஜுன் 26 திகதியிடப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

## கடன்மறுசீரமைப்பு குறித்து பெரமுனவுக்கு ரணில் விளக்கம்

### அமைச்சரவைக் கூட்டம் முடிந்ததும் சந்திப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில்தனிப்பட்டசந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

நேற்றையதினம் நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் கடன் மறுசீரமைப்புக்கான அனுமதி வழங்கப்பட்ட கையோடு, ஜனாதிபதி செயலகத்தில் இந்தச்சந்திப்புநடைபெற்றது.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்ததாவது:

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் விரிவான கலந்துரையாடலொன்று எமக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் நடைபெற்றது. இதன்போது முரண்பாடுகள் எவையும் தோன்றவில்லை. சிலர் சத்தமாகக் கதைத்தனர். சிலர் மெதுவாக கதைத்தனர். விசேடமாக கூறுமளவிற்கு எந்த விவகாரங்களும் நடைபெறவில்லை.

இந்நிலையில் மறுசீரமைப்பு தொடர்பிலான கலந்துரையாடலின்போது, நாட்டின் வங்கிகளில் உள்ள வைப்புக்களுக்கு எவ்வித மானபாதிப்பும்ஏற்படாதுஎன்ற உறுதிப்பாடு ஜனாதிபதியால் வழங்கப்பட்டது.

அத்துடன், ஊழியர் சேமலாப நிதியில் இந்த ஆட்சீ ஒருபோதும் கைவைக்காது என்பதும், ஒன்பது சதவீதத்துக்கு குறைவான வட்டி வழங்கப்படாது ☞ 2

## வரிப் பிரச்சினைகளை விசாரிக்க தனி நீதிமன்றம் அமைக்கப்படும்

### நீதி அமைச்சர் விஜயதாச தெரிவிப்பு

அன்றாடம் வரி அறவீட்டின் போது ஏற்படக்கூடிய பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்கான விசேட நீதிமன்றம் ஒன்றை நிறுவுதல் உள்ளிட்ட பரிந்துரைகளை ஜனாதிபதியின் அனுமதிக்காக விரைவில் கையளிக்க எதிர்பார்த்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்லாபிட்டிய தெரிவித்தார்.

அதில்வரிஅறவீடுதொடர்பிலான நடைமுறைப் பிரச்சினைகளை நிவர்த்தித்தல் தொடர்பிலான விசேட பரிந்துரைகளை உள்ளடங்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

'உறுதியான நாட்டிற்கு, அனைவரும் ஒரே வழிக்கு' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் ☞ 2

## கடன்மறுசீரமைப்புக் குறித்து ஆராய நாடாளுமன்ற நிதிக் குழு கூடுகிறது

### கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

தேசியகடன்மறுசீரமைப்புடன்தொடர்புயைஅனைத்து தரப்பினரையும் அரச நிதி தொடர்பான நாடாளுமன்றக் குழுவிற்குஅழைத்துள்ளதாக அதன் தலைவரும், ஐக்கிய மக்கள்சக்தியின்நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ஹர்ஷடிசில்வாதெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் செய்தியாளர்கள் சந்திப்பு நேற்றையதினம்,கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற போதேஅவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சரவை தேசிய கடன் மறுசீரமைப்புக்கான அனுமதியைவழங்கியுள்ளது. இந்த நிலையில் தேசிய கடன்மறுசீரமைப்புடன் தொடர்புடையதரப்புக்களான இலங்கை மத்தியவங்கி, நாணய சபை, திறைசேரி, சட்டமாஅதிபர்திணைக்களம், கணக்காய்வாளர் நாயகம், ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், காப்புறுதிக் கூட்டுத்தாபனம், ஆகியவற்றின் பிரதானிகள், பிரதான வங்கிகளின் தலைவர்கள் உள்ளிட்டவர்கள் நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

மத்திய வங்கியின் ஆளுநர், மற்றும் நிதிய அமைச்சின் பதில் செயலாளர் ஆகியோரிடமிருந்தே கடன்ம றுசீரமைப்புக்கான திட்டத்தினை எதிர்பார்த்துள்ளோம்.

இந்தக் கூட்டத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வருகை தரவுள்ளார். இந்நிலையில் குறித்த கடன்மறுசீரமைப்பு திட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்கின்றோம்.அத்திருத்தங்களை மேற்கொண்டதன் பின்னரே சனிக்கிழமை நிறைவேற்றுவதற்கானஅனுமதியை ☞ 2

## கடன்சீரமைப்புக் குறித்து மக்களுக்கு ஜனாதிபதி பகிரங்கப்படுத்தவேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

கடன்மறுசீரமைப்பு எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றது என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு பகிரங்கமாகக் கூற வேண்டுமென எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச வலியுத்தியுள்ளார்.

பொலன்னறுவையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள்சந்திப்பின்போதுஅவர் இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதுதேசியகடன்மறுசீரமைப்புநடைபெறவுள்ளது. இதனையடுத்துவெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பும் முன்னெடுக்கப்படவுள்ளது. இந்த விடயத்திலா் வெளிப்படைத்தன்மை பேணப்படவில்லை.

ஜனாதிபதி இந்த விடயத்தினை நாட்டு மக்களுக்கு வெளிப்படையாக தெளிவுபடுத்த வேண்டும். கடன்கள் தள்ளுபடி செய்யப்படுமா, பிணை முறிகள் காலாவதியாகும் காலம் நீடிக்கப்படுமா, வட்டிவீதம் குறைக்கப்படுமா என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

தமது ஊழியர் சேமலாப நிதிக்கு என்ன நடக்கும், தமது ஊழியர் நம்பிக்கை நிதிக்கு என்ன நடக்கும் என்ற அச்சத்தில் பொதுமக்கள் உள்ளனர். அவர்களுக்கு உரியதெளிவுபடுத்தல் ☞ 2

## பொருளாதாரத்தில் மீண்டெழும் இயலுமை இலங்கைக்கு உண்டு

### உலகப் பொருளாதாரப் பேரவை தலைவர் தெரிவிப்பு

பொருளாதார நெருக்கடியிலிருந்துமீண்டெழக்கூடிய வகையில் இலங்கைக்கு இயலுமை உள்ளதாக உலக பொருளாதாரப்பேரவையின் தலைவர் போர்ஜ் ப்ரெண்டி நம்பிக்கைவெளியிட்டுள்ளார்.

சீன வெளிவிவகார அமைச்சர் ஷின் கொங்கின் உத்தியோகபூர்வ அழைப்பின்பேரில் 7நாட்கள் பயணம் மேற்கொண்டுள்ள வெளி விவகார அமைச்சர் அலி சப்ரி, அங்கு பல்வேறு ☞ 2

## வெடுக்குநாறி ஆலய வழக்கு ஒத்திவைப்பு

ந.லோகதயாளன்.

நெடுங்கேணி வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயப்பகுதிக்குள் ஆலய நிர்வாகம. உள்ளிட்ட எவருமேசெல்லக்கூடாது என உத்தரவிடக்கோரி பௌத்த தேரர்கள் உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கு ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதிக்குஒத்திவைக்கப்பட்டது.

உச்சநீதிமன்றில்நேற்று இடம்பெற்ற இவ் வழக்கில் ஆலய பூசகர் மற்றும் ஆலய நிர்வாகச்செயலாளர் சார்பில் ஜனாதிபதிசட்டத்தரணி ☞ 2

## இனி இது .....

நிறைவேற்றப்பட்டால், இரண்டு நன்மைகள் ஆட்சியாளர்களுக்குக் கிடைக்கும். ஒன்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் வேட்புமனுக்களை இல்லாது செய்து, தேர்தலையும் இல்லாது செய்யமுடியும்.

அப்படிச் செய்வதன் மூலம் நீதிமன்ற உத்தரவை மீறியும் தேர்தலை நடத்தவில்லை என்கிற அச்சுறுத்தல் ஆட்சியாளர்களைத் தொடர்வதிலிருந்தும் தப்பிக்கொள்ள முடியும். அதேநேரம் உள்ளூராட்சி சபைகளையும் தேர்தலே இல்லாமல் இயங்கவைக்கவும் முடியும். அப்படிச் செய்வதன் மூலம் அடுத்த வருடம் இடம்பெறவுள்ள தேர்தல்களின்போது, உள்ளூராட்சி சபைகளில் பெரும்பாலானவை ஆளும் தரப்பின் கைகளில் இருப்பதை உறுதிப்படுத்த முடியும்.

இந்த உள்நோக்கங்களுடன் தனிநபர் பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் ஒரு தனிநபர் பிரேரணை இது போன்றே தேர்தல் தொடர்பாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் அது இன்னமும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் முன்வைக்கப்பட்ட தனிநபர் பிரேரணை அது. இரண்டாவது தடவையாக அந்தப் பிரேரணை வர்த்தமானியில் அறிவிக் கப்பட்டபோதும், நாடாளுமன்றத்தில் அது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவும் இல்லை, அதனை நிறைவேற்றும் எண்ணமும் ஆட்சியாளர்களிடம் இல்லை.

இப்போது ஆளும் தரப்பினரே கொண்டு வந்துள்ள உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பான தனிநபர் பிரேரணைக்கு என்ன நடக்கிறது என்று பொறுத்திருந்து பார்க்கலாம்.

.........................

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மூன்றுநாள் பயணமாக இன்று யாழ்ப்பாணம் வருகின்றார். இந்தப்பயணத்தில் அவர் பல்வேறு தரப்பினரையும் சந்திப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. சிறிலங்காசுதந்திரக் கட்சி அலுவலகத்தில் இருந்து இந்தச் சந்திப்புக்களுக்கான ஒழுங்குபடுத்தல்களை மேற்கொள்ளபொதுஅமைப்புக்கள், சமய அமைப்புக்களுக்கு அழைப்பெடுத்த நபர் அழாக் குறையாகத் திட்டு வாங்கிய கதை பற்றிய தகவல்கள் கசிந்து வருகின்றன.

அலுவலகத்தில்இப்போது பணியில் இருப்பதோ புதிய நபர். இதற்கு முன்னர் நடந்த எந்த அரசியல் சுத்துமாத்துக் காரியங்கள் குறித்தும் எதுவும் தெரியாத அப்பாவிபோலுள்ளது. பொது அமைப்புக்களுக்கு அழைப்பெடுத்து,முன்னாள்ஜனாதிபதி வருகிறார் அவரைச் சந்தித்து உங்கள்பிரச்சினைகள்தொடர்பில் எடுத்துக்கூற முடியும் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யட்டுமாஎன்று அந்த இளைஞன் கேட்கப்போக,எதிர்முனையில் இருந்தவர்களோ அவனை ஒரு பிடி பிடித்து ஏறு ஏறு என்று ஏறிவிட்டுள்ளார்கள்.

மைத்திரிபால ஜனாதிபதியாகஇருந்தபோதுஅவரைச் சந்திக்க நாங்கள் கேட்டபோது அதற்குவழிஏற்படுத்தித்தராத நீங்கள், அப்படித் தந்தாலும் எங்களைஅழைத்துச்சென்று மணித்தியாலக் கணக்கில் காத்திருக்க வைத்து சொற்ப நேரமே சந்திக்க அனுமதிக்கப்பட்டபோதும் எங்கள் கோரிக்கைகளில் எவற்றையும்நிறைவேற்றித் தராத நீங்கள், இப்போது எந்த முகத்தைவைத்துக்கொண்டு முன்னாள் ஜனாதிபதியை சந்திக்கவருமாறுகேட்கிறீர்கள் என்று எகியிருக்கிறார்கள்.

முன்னர் நடந்தது எதுபற்றியும்தெரியாத அந்த அலுவலக இளைஞனோ, பரிதாபகரமாக முன்னர் நடந்ததெல்லாம் எனக்குத் தெரியாது மன்னச்சுக் கொள்ளுங்கோஏன்று அழாக் குறையாக எல்லோரிடமும் மன்னிப்புக்கேட்டிருக்கிறான். என்ன செய்வம், பதவியில் இருக்கும்போதுபாராமுகமாக இருப்பதும் பதவியைப் பிடிக்க வீடு தேடிவருவதும் அரசியல்வாதிகளுக்குச் சகஜம்தான்என்பதுஇன்னும் அந்தப் பையனுக்குத் தெரியவில்லைப் போலும்.

**இடிமின்னல்**
(idiminnal23@gmail.com)

## உள்நாட்டுக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் இடம்பெற்ற விசேட அமைச்சரவை கூட்டத்தின்போது உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைக்கு அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடன்மறு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றவிடயமும்உறுதியாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், மத்திய வங்கியின் ஆளுநர் பிரசன்னமாகி, கடன்மறுசீரமைப்பு எவ்வாறு பாதகமின்றி முன்னெடுக்கப்படவுள்ளதுஎன்பது பற்றிய விளக்கத்தினையும் வழங்கியிருந்தார் - என்றார்.

## கடன்சீர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட வேண்டும்.

அவ்வாறான தெளிவுபடுத்தல் ஊடாகவே வெளிப்படைத்தன்மையான தேசிய கடன்மறுசீரமைப்பினை மேற்கொள்ள முடியும் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும் என்றார்.

## ஹர்ஷ ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளிக்க முடியும்;.

மேலும் தேசிய கடன் மறுசீரமைப்பு முன்மொழிவுகள் தொடர்பில் முதலில் ஆராய்ந்து அது தொடர்பில் தீர்மானங்களைஒன்றன்பின் ஒன்றாகவே எடுக்க முடியும். அதன் பின்னரேயே இறுதித் தீர்மானத்திற்கு வரமுடியும் என்றார்.

## வரவேற்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்நாட்டுமறுசீரமைப்பு குறித்து அரசாங்கத்திற்குள் போதியளவு விவாதம் இடம்பெற அனுமதிப்பதற்காகவும் பொதுமக்கள் மற்றும் சந்தைகளின் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்காகவுமே ஐந்து நாள் விடுமுறை வங்கிதுறைக்கு வழங்கப்பட்டுள்ளது என மத்திய வங்கி ஆளுநர் தெளிவுபடுத்தியுள்ளமை சிறந்த விடயமாகும்.

உள்நாட்டு கடன்மறுசீரமைப்பு திட்டத்தை அறிவிக்கவேண்டும் அதற்கு அமைச்சரவை பொதுநிதிக்குழு பாராளுமன்றம் ஆகியவற்றின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என்பது முறையான நடைமுறையாகும்.

ஐந்து நாள் வங்கி விடுமுறையின்போது ஏடிஎம் ஒன்லைன் மற்றும் ஏனைய டிஜிட்டல் வழிமுறைகளை பயன்படுத்தி பொதுமக்கள் பணப்பரிமாற்றத்தை மேற்கொள்ளமுடியும் என்று ஆளுநர் உறுதி அளித்துள்ளமையும் வரவேற்கத்தக்கது என்றுள்ளது.

## ரணிலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய கடன்மறுசீரமைப்பால் வங்கி கட்டமைப்பு பாதிக்கப்படாது என ஜனாதிபதி குறிப்பிடுகிறார். ஆனால், தேசியகடன்எவ்வாறு மறுசீரமைக்கப்படும்என்பதைஅவர் குறிப்பிடவில்லை.

கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துக்கு அமையவே தீர்மானம் எடுக்கப்படும் என ஜனாதிபதி குறிப்பிடுவதைஏற்றுக்கொள்ள முடியாது.

கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் எதிர்க்கட்சிகளிடமிருந்து ஆலோசனைகள் ஏதும் பெற்றுக்கொள்ளப்படவில்லை. ஆகவே, கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் நாடாளுமன்றத்தின்முழுமையான ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகஜனாதிபதி குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

69 இலட்ச மக்களின் ஆணை தவறாக பயன்படுத்தப்படுகிறது. 69 இலட்ச மக்கள் பொம்மைகள் அல்ல என்பதைஜனாதிபதிவிளங்கிக் கொள்ள வேண்டும்.

பொருளாதார பாதிப்பில் இருந்து மீள்வதற்கான நடவடிக்கையெனக் கூறிக் கொண்டு ஜனாதிபதி முன்னெடுக்கும்முறையற்றசெயற்பாடுகளுக்கு பொதுஜன பெரமுன துணை செல்லுமா? - என்றார் அவர்.

## தேசிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊழல்மோசடிகள் நடைபெற்றுள்ளன. பெரும் கொள்ளைகள் நடைபெற்றுள்ளன. அவற்றின் மூலமாகப் பெறப்பட்டுள்ள பணமானது வெளிநாடுகளில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், அத்தகைய மோசடிகளில் ஈடுபட்ட தரப்பினர் இன்னமும் ஆளும்தரப்பில் அங்கத்துவத்தினைக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள்மீதுஎவ்விதமான விசாரணைகளும் முன்னெடுக்கப்படவில்லை. மோசடி செய்யப்பட்ட பணத்தினைமீண்டும்பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.

இத்தகைய மோசடிகளால்தான் பொதுமக்கள் தற்போது கடும்பொருளாதார நெருக்கடிகளுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இந்தப் பின்னணியில், மீண்டும் ஆட்சியாளர்கள் பொருளாதாரத்தினை மீட்கப்போவதாக கூறிக் கொண்டுகடன்மறுசீரமைப்பு செய்வதற்கு முன்னைகின்றனர்.

இந்தவிடயத்தில்எவ்விதமான வெளிப்படைத்தன்மையும் பின்பற்றப்படவிலலை. அப்பாவி பொதுமக்கள் மீதே மீண்டும் சுமைகளை அதிகரிக்கப்படுகின்றன.

வெளிப்படைத்தன்மையற்ற, அனைத்து மக்களையும் அரவணைக்காது அவசரமாக மேற்கொள்ளப்படும் கடன்மறுசீரமைப்பானது இரண்டாவது கொள்ளையா என்றசந்தேகத்தினைஎமக்கு ஏற்படுத்தியுள்ளது.

எம்மைப் பொறுத்தவரையில் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஆட்சியொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். அதன் பின்னரே நிதி கையாளலுக்கான அதிகாரம் அரசாங்கத்திற்கு முறையாகச் செல்லும். தற்போதுள்ள அரசாங்கம் மக்களின் ஆணையற்ற அரசாங்கம் என்பதை மறந்துவிடக்கூடாது-என்றார்.

## வெடுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.ஏ.சுமந்திரன் நீதிமன்றில் முற்பட்டிருந்தார்.

வெடுக்குநாரி ஆலயப் பகுதி ஓர் தொல்லியல் சின்னமாக காணப்படும் போதும் அதனைப் பேணிப் பாதுகாக்க தொல்லியல்த் திணைக்களம் தவறியதனால் ஆலயம் என்னும் பெயரில் அப்பகுதிக்குச் சென்று இடையூறு ஏற்படுத்துகின்றனர், எனவே அப்பகுதிக்கு எவரும் செல்லக் கூடாது என உச்சநீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்றே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கிலே தொல்லியல் திணைக்களம் சார்பில்சட்டமாஅதிபர்திணைக்களத்தைச் சேர்ந்த ஓர் அரச மன்றாடியாரும்ஆலயபூசகர் மற்றும்செயலாளர் சார்பிலே ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும் நீதிமன்றில் வாதாடினர்.

சட்டத.தரணி சுமந்திரன் இந்த வழக்கு தொடுநர் தரப்பு வேண்டுமென்றே பல விடயங்களை மறைத்தே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர். குறிப்பாக அப்பகுதியை பாதுகாக்க தொல்லியல்த்திணைக்களம் நடவடிக்கை எடுக்காத காரணத்தினாலேயே ஆலய நிர்வாகம் அப்பகுதிக்குள் செல்வதாககுறிப்பிட்டுள்ளனர். மாறாக ஆலய நிர்வாகம்மீது தொல்லியல்த்திணைக்களம் சார்பிலே வவுனியா நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்ற அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஆலய பூசைகள் இடம்பெறுகின்றன.

எனவே இவற்றை அறிக்கையிட நீண்ட கால சந்தர்ப்பம் வழங்குவதோடு ஆலய நிர்வாகத்திற்கோ அல்லது பூசகருக்கோ தடை விதிக்க கூடாது எனவும் கோரினார்.

இவற்றினை ஏற்ற நீதிமன்றம் எதிராளிகள் தரப்பு அறிக்கையை மன்றுக்கு சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்கி ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## திருடர்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழியையே மக்கள் விடுதலை முன்னணி தெரிவு செய்துள்ளது. இதனால், இந்த வழிமுறைக்கு இணங்கும் அணிகளுடன் அடுத்த கட்ட செயற்பாடுகளை தெரிவு செய்ய முடியும்.

காலிமுகத்திடல் போராட்டத்தின் ஊடாக அதிகார மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கலாம் என்ற கூறப்படும் நிலைப்பாடுகளை நிராகரிக்கின்றேன்.

ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரி மாளிகையை கைப்பற்றி பிடித்துக் கொண்டிருப்பது அதிகார மாற்றமல்ல. ஆயுதப்போராட்டத்தின் ஊடாக அதிகார மாற்றத்தை ஏற்படுத்தும் வழிமுறையில் மக்கள் விடுதலை முன்னணி இல்லை.

மக்களின் ஆணையின் ஊடாகவேஅதிகாரமாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் என்பது கட்சியின் நிலைப்பாடு. அதற்கான ஆரம்பங்களை நாம்முன்னெடுத்துள்ளோம்.

மக்கள், இனிமேலும் திருடர்களின் கைகளில் ஆட்சியை ஒப்படைவதற்கு தயாரில்லை. ஆகவே அடுத்த தேர்தல் மிகச் சிறந்தவொரு செந்தியை உலகத்திற்கு வழங்கும் என்றார்.

## பொருளாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்மட்ட அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தி வருகின்றார்.

அச்சந்திப்புக்களின் ஓரங்கமாக சர்வதேச பொருளாதாரக் கட்டமைப்புக்களில் ஒன்றான உலக பொருளாதாரப்பேரவையின் தலைவர் போர்ஜ் ப்ரென்டியை சந்தித்துள்ள அமைச்சர் அலி சப்ரி, இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைவரம் மற்றும் பொருளாதார மீட்சி செயன்முறை என்பன தொடர்பில் கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளார்.

இதன்போது இந்நெருக்கடியிலிருந்த மீண்டெழக்கூடிய இலங்கையின் இயலுமை தொடர்பில் உலக பொருளாதாரப்பேரவையின் தலைவர் போர்ஜ் ப்ரென்டி நம்பிக்கை வெளியிட்டார் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அவரது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

## வரிப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

2022 ஆம் ஆண்டில் மொத்த தேசிய உற்பத்தியுடன் ஒப்பிட்டுபார்கின்றபோது வரிவருமானம் மிகக் குறைந்த அளவில் காணப்படும் ஒருநாடாகவே இலங்கை விளங்கியது. வரிவருமானம் 7.3 சதவீதமாக காணப்பட்ட போது அரச செலவு 19-20 சதவீதமாக காணப்பட்டது.

அரச வருமானத்தை அதிகரித்துக்கொள்வதில் வரி சேகரிப்பு முக்கியமான காரணியாகும். வரி அதிகரிப்பினால் மாத்திரமே அரச வருமானத்தை அதிகரித்துக்கொள்ளவும் முடியும். எவ்வாறாயினும் நேரடியாகவோ மறைமுகமாகவோ வரிசேகரிப்பது இலகுவானது அல்ல.

தற்போது வரி அறவீட்டுச்செயற்பாடுகள் மகிழ்ச்சிகரமான நிலையில் காணப்படுகின்றன. நாட்டின் நலன் கருதி சுயமாக வரி செலுத்திய மக்களுக்கு நன்றி. அவர்கள் ஓரளவிற்கு ஆட்சியாளர்களின் தேவையை புரிந்துக் கொண்டுள்ளனர்.

2022 வருடத்தில் 7.3 சதவீதமாக காணப்பட்ட வரி வருமானம் 2023 இன் முதல் காலாண்டில் 15.8 சதவீதமாக உயர்வடைந்துள்ளமை ஒரு மைல்கல் இலக்காகும். பொதுவார அரசு நேரடியான வரி அதிகரிப்பை மேற்கொள்ளவே விரும்புகிறது. அதேபோல் தற்போதைய வரி வருமானத்தை சீராக பேணிச்செல்வது மாத்திரமே எமது எதிர்பார்ப்பாகும். புதிய வரிகளை அறவிடும் எதிர்பார்ப்புக்கள் அரசிடம் இல்லை.

அனைத்து சந்தர்ப்பங்களிலும் முடிந்த அளவில் மக்களுக்கு சலுகை களை பெற்றுக்கொடுப்பதற்கே நாம் முயற்சிக்கின்றோம். வங்கிக் கடன் அதிகரிப்பு தொடர்பிலும் இந்த ஆட்சி அவதானம் செலுத்தியுள்ளது. கடந்த வாரத்தில் அரச வங்கிகளின் வட்டி வீதம் 2.5 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. மக்களிடத்திலிருந்து வரி சேகரிக்கப்படும்போது அதற்கு இணையான வகையில் சலுகைகளை பெற்றுக்கொடுக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதும் 3இலட்சம் பேர் மாத்திரமே வரி செலுத்துகின்றனர். அரசின்ன் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு 10இலட்சம் வரி ஆவணங்களாவது பேணப்படவேண்டும். அதனைச் சரிவரச் செய்யும் பட்சத்தில் நாட்டின் ஒரு தொகுதி மக்கள் மீது மாத்திரம் சாட்டப்பட்டுள்ள வரிச்சுமையை மட்டுப்படுத்தலாம்.

வரி செலுத்துவதால் ஆட்சியாளர்களுடனான நல்லதொரு தொடர்பாடல் உருவாகும். தனித்துவமான 14 கல்வியறிவுள்ள குழுக்களுக்காக வரிப் பத்திரங்கள் திறக்கப்படவுள்ளன. வரிச் செலுத்துபவர்களே நாட்டின் வலுவான பிரஜைகளாவர்.

அதேபோல் அரசாங்கம் மக்களிடத்திலிருந்து சேகரிக்கப்படும் வரிப்பணத்தை உரிய முறையில் செலவிடுவதில்லை. வரி பணத்தை செலவிட்ட விதம் தொடர்பில் 6 சுற்றறிக்கைகள் வாயிலாக அறிந்துகொண்ட முடிந்துள்ளது.

தற்போதைய அரசாங்கத்தை போன்று சீரான முறையில் எந்த ஒரு அரசாங்கமும் வரி வருமானத்தை முகாமைத்துவம் செய்திருக்கவில்லை. அதனால் அரசாங்கம் பொது மக்களின் பணத்தை சிறந்த முறையில் பாதுகாக்கும்.

உதாரணமாக அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் கீழ் உரியவர்களுக்கு மாத்திரம் சலுகைகளை பெற்றுக்கொடுக்கவே அரசாங்கம் முயற்சிக்கிறது. அதற்கான தரவுகளை வழங்குவோர் உண்மையான தரவுகளை வழங்க முடியும். தகவல் பெறுகின்றவரும் உண்மையானதகவல்களை பெற்றுக்கொள்ள கடமைப்பட்டுள்ளார். இவ்வாறான விடயங்களை பலரும் விரும்புவதில்லை. பல்வேறு நெருக்கடிகள் மற்றும் அவதூறுகளுக்கு மத்தியிலும் அரசாங்கம் உரியவர்களுக்கு சலுகைகளை வழங்கவே முயற்சிக்கிறது. அரசியல் தொடர்புகளை கருத்திற் கொண்டு சலுகை வழங்கும் செயற்பாடுகள் இனிவரும் நாட்களில் முன்னெடுக்கப்படாது.

தற்போது நாட்டில் வரி செலுத்தாமல் இருக்கின்றவர்களிடத்தில் வரி அறவிடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. எமது நாட்டில் இருப்பது சுய விருப்பத்தின் பேரில் வரி செலுத்தும் முறைமையாகும். உதாரணமாக ஒருவருடைய வருமானம் யாதென அரசாங்கம் கேட்டறிந்த பின்னர் அரசே வரி அறவீட்டினை தீர்மானிக்கின்றது. வரி சேகரிக்கச் செல்லும் போது சில நீதிமன்றத்திற்கு செல்கின்றனர். அவ்வாறான நேரங்களில் வருடக்கணக்கில் நீதிமன்ற செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியிருக்கும்.

பெருமளவான வழக்குகள் இன்றும் நிறைவடையாமலேயே உள்ளன. இவ்வாறான பல நடை முறைப் பிரச்சினைகள் வரி அறவீட்டில் உள்ளது. வரி அறவீட்டிற்கான விசேட முறைமைகள் அடங்கிய யோசனைகள் அடங்கிய தொகுப்பொன்றை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அனுமதிக்காக வழங்கவுள்ளோம்.

அதில் மேற்படி பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்கான விசேட நீதிமன்றம் பற்றிய விடயங்களும் உள்ளடங்கியுள்ளன. தற்போதும் மதுபான உற்பத்திநிறுவனங்களுக்கான உற்பத்தி வரி 20 சதவீத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அவர்கள் வரி செலுத்துவதில்லை. 14 நாட்களில் அவற்றை செலுத்துமாறு விசேட கட்டளை ஒன்றும் பிரப்பிக்கப்பட்டுள்ளது.

எமது நாடு 83 பில்லியன் டொலர்கள் கடன்பட்டுள்ளது. அதில் 41 பில்லியன் டொலர்கள் வெளிநாட்டுக் கடனாகவும் 42 பில்லியன் டொலர்கள் உள்நாட்டு கடனாகவும் காணப்படுகின்றன. ஒரு நாடு என்ற வகையில் ஸ்திரமான சூழ்நிலையை உருவாக்க ஒவ்வொருவரும் சில அர்ப்பணிப்புக்களை செய்ய வேண்டும்.

அதற்கானமுறைமைகள் பற்றியும் எதிர்காலத்தில் ஆராயலாம். எவ்வாறாயினும் தற்போது வீழ்ச்சியடைந்த நாட்டை கட்டியெழுப்ப முயற்சிக்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளை பெறுவதற்கு சென்ற போது எத்தனை பேர் போலிப் பிரச்சாரங்களைமேற்கொண்டனர். சரியான முறையில் முகாமைத்துவச் செயற்பாடுகளை சீர்படுத்துவதற்காகவே வங்கிகள் சிலதினங்களுக்கு மூடப்படவுள்ளன. அதனால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு எவ்வித பிரச்சினைகளும் ஏற்படாது.

தற்போது அஸ்வெசும திட்டத்தை குழப்பி சிலர் நாட்டைமுடக்கபார்க்கிறார்கள். பாரம்பரிய எதிர்கட்சிகளின் கொள்கைகளுடன் மோத வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது. இலங்கை சாதாரண நாடாகும். இங்கு எவரேனும் சூழ்ச்சி செய்ய முற்பட்டால் நல்லபலன்களை நாம் அடைய முடியாது. அதனால்நாட்டின்முன்னேற்றத்திற்கு தடைபோடுவதற்கு மாத்திரமே முடியும். எவ்வாறாயினும் அரசாங்கம் தூரநோக்குடனேயே செயற்படுகின்றது என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22



காலைக்கதிர் Kalaikkathir

# 2009இல் இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் இந்தியாவின் நடத்தையை தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் மன்னிக்கார்

## பிரிட்டனில் அண்ணாமலை காட்டம்



2009 ஆம் ஆண்டு ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை ஒருபோதும் மறக்கமாட்டேன் என தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

2009 இல் இந்தியா நடந்துகொண்டவிதத்தை நானும் தமிழ்நாட்டின் தமிழர்களும் ஒருபோதும் மன்னிக்கமாட்டோம் எனக் குறிப்பிட்டள்ள அவர், இந்தியா தலையிட்டு யுத்தத்தை தடுத்திருக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

2009 மே மாதம் பத்தாம் திகதி குஜராத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் இலங்கையில் எனது சகோதர சகோதரிகள் படுகொலை செய்யப்படும்போது இந்திய அரசாங்கம் என்ன செய்கின்றது என நரேந்திரமோடி பகிரங்கமாக கேள்வி எழுப்பினார் என அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்கு இந்திய பிரதமர் அரசியல் தீர்வொன்றை வழங்குவார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2014 இல் பா.ஜ.க. அரசாங்கம் ஆட்சிக்குவந்தது முதல் அணுகுமுறை மாற்றமடைந்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ள அவர், தமிழ்நாட்டுக்கும் பலாலிக்கும் இடையிலான நேரடிவிமானசேவை காரைக்கால் காங்கேசன்துறை இடையிலான படகு சேவை மற்றும் மன்னார் தமிழ்நாட்டுக்கு இடையிலான படகுசேவைதிட்டம் போன்றவற்றால் மக்கள்மத்தியிலானதொடர்புஅதிகரிக்கப்படுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு சென்ற மலையக மக்களை சந்தித்த முதல் இந்திய பிரதமர் நரேந்திர மோடி என்பதையும் அண்ணாமலை நினைவூட்டினார்.

1987ம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்பதே இந்தியாவின் உறுதியான நிலைப்பாடு எனவும் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழர்கள் மலையகத்தமிழர்கள் பெருந்துன்பங்களை அனுபவித்துள்ளனர் இருசமூகத்தினரையும் சர்வதேசசக்திகள் தங்கள் சதுரங்கவிளையாட்டிற்காக பயன்படுத்தியுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# அரசுக்குப் பெரும் நெருக்கடி ஏற்படும் பங்காளியான சந்திரசேன எச்சரிக்கை



அஸ்வெசும நலன்புரி செயற்திட்டத்தில் பாரிய குறைபாடுகள் காணப்படுகின்றன. ஏழ்மையில் உள்ளவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள்.

குறைபாடுகள் விரைவாகதிருத்திக்கொள்ளப்பட வேண்டும் இல்லாவிடின் அரசாங்கத்துக்கு பாரிய நெருக்கடி ஏற்படும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

சமுர்த்தி நலன்புரி செயற்திட்டம் அரசியல் நோக்கத்துக்காகவேவழங்கப்படுகிறதுஎனஎதிர்க்கட்சியினர் குறிப்பிடுகின்றமையை ஏற்றுக்கொள்ளமுடியாது. அது முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் ஆட்சி காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் சமுர்த்தி நலன்புரி வழங்கல் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டது. தற்போது எதிர்க்கட்சியில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தியினர் ஆட்சியில் இருந்த போது சமுர்த்தி நலன்புரிசெயற்திட்டத்துக்கு எதிராக செயற்படவில்லை.

குறுகிய நோக்கத்தை அடிப்படையாக கொண்டே சமுர்த்தி நலன்புரி செயற்திட்டம் விமர்சிக்கப்படுகிறது. இவ்வாறான பின்னணியில் அரசாங்கம் அறிமுகப்படுத்திய அஸ்வெசுமநலன்புரிசெயற்திட்டம் சமூக கட்டமைப்பில் பாரிய முரண்பாடுகளை ஏற்படுத்தியுள்ளது.

அஸ்வெசும நலன்புரி செயற்திட்டத்தில் பாரிய குறைபாடுகள் காணப்படுகின்றன. ஏழ்மையில் உள்ளவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே, குறைபாடுகள் விரைவாக திருத்திக் கொள்ளப்பட வேண்டும் இல்லாவிட்டால் அது அரசாங்கத்துக்கு பாரிய நெருக்கடியை ஏற்படுத்தும். - என்றார். (05)

# மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றவாளி இலங்கை என்பதை வெளிப்படுத்துங்கள்

## ஐக்கிய இராச்சியத்தின் ஈழத் தமிழர் பேரவை வலியுறுத்தல்

இலங்கை மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றவாளி என்பதை வெளிப்படுத்துவதுடன், சித்திரவதைகளால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் புனர்வாழ்வு பெறுவதற்கு அவசியமான உதவிகளை வழங்க முன்வருமாறு ஐக்கிய நாடுகள் சபையின் கிளை அமைப்புக்கள் மற்றும் சித்திரவதைகளுக்கு எதிராகப்போராடும் சர்வதேச கட்டமைப்புக்களிடம் ஐக்கிய இராச்சியத்தின் ஈழத்தமிழர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டோருக்கான ஆதரவு தொடர்பான சர்வதேச தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே ஐக்கிய இராச்சியத்தின் ஈழத்தமிழர் பேரவைவலியுறுத்தியுள்ளது.

அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

இம்முறை சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கான அனைத்துலக ஆதரவு நாள் 26. 'சித்திரவதை - மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றம்' என்ற தொனிப்பொருளில் நினைவுகூரப்படுகின்றது.

இருப்பினும் சித்திரவதைகளையே அரசியல் கொள்கையாக்கி, ஈழத்தமிழர்களை இனவழிப்புக்கு உள்ளாக்கிவரும் இலங்கை அரசாங்கம் சர்வதேச சட்டங்கள் மீதான எவ்வித அச்சமுமின்றி தினந்தோறும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டுவருகின்றது.

எனவே ஐக்கிய நாடுகள் சபையின் கிளை அமைப்புக்களும், சித்திரவதைகளுக்கு எதிராகப் போராடும் சர்வதேச கட்டமைப்புக்களும் கூட்டிணைந்து இலங்கை மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றவாளி என்பதை வெளிப்படுத்தவேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள்புனர்வாழ்வுபெறுவதற்கு உதவ முன்வரவேண்டும் என்றும் உலகெங்கிலும் உள்ள ஈழத்தமிழ் மக்கள் வலியுறுத்துகின்றனர்.

அதேவேளை உள்நாட்டுப்போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உரியவாறான விசாரணைகளை முன்னெடுப்பதில் இலங்கை விருப்பமின்றி இருப்பதால், பாதிக்கப்பட்ட தரப்பினர் வேறு இடங்களில் நீதி விசாரணையைக் கோரவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குறிப்பாக தற்போது உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துவருகின்றது. இருப்பினும் முன்னைய ஆணைக்குழுக்களின் பரிந்துரைகள் எவையும் கவனத்திலெடுக்கப்படாத பின்னணியில், இந்நடவடிக்கைகள் நீதியை நிலைநாட்டுவதற்காகவன்றி நீதியை ஓரங்கட்டுவதற்கானமுயற்சியாகவேஅமைந்துள்ளது.

ஆகவே, இலங்கை உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கு முன்னதாக உரோம் எழுத்து ருவச் சட்டத்தில் கையெழுத்திட்டு, அதன் நடவடிக்கைகளை ஏற்று, அனைத்துலக நீதிமன்றத்தின் அதிகார வரம்பெல்லைக்குள் கொண்டுவரப்படவேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபையால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிடம் முன்வைக்கப்பட்ட பரிந்துரையை நாம் மீள வலியுறுத்துகின்றோம் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# ஊடக ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் அவசியமா? ஜனநாயகத்துக்குப் மிகப்பெரும் அச்சுறுத்தல்!

## பேராசிரியர் அ. சர்வேஸ்வரன் எச்சரிக்கை



நாட்டின் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் ஊடக ஒழுங்குப்படுத்தல் சட்டமூலம் அவசியமா? குறிப்பாக அண்மையில் கொண்டு வரப்படவிருந்த புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் கூட ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் ஏற்பாடுகள் இருந்தன.

இந்நிலையில் இவ்வாறான சட்டங்கள் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்த திட்டமிடும் போது ஊடகங்கள் கடுமையாக கட்டுப்படுத்தப்பட்டு அது ஜனநாயகத்துக்கு பாரியதொரு அச்சுறுத்தலாக அமையலாம் என பேராசிரியர் அ.சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

அரசாங்கம் ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு வரைவைத் தயாரித்துள்ளது. இந்த வரைவு தொடர்பில் முக்கியமான மூன்று பிரச்சினைகள் உள்ளன. முதலாவது இந்த சட்டமூலத்தில் மொழியப்பட்டுள்ள ஆணைக்குழு எவ்வாறாக அமையப் போகிறது? என்பதாகும். இரண்டாவது இந்த ஆணைக்குழுவுக்கு இருக்கக் கூடிய அதிகாரங்கள் என்ன? என்பதும், மூன்றாவது இவ்வாறானதொரு சட்டமூலம் நாட்டுக்கு அவசியமா? என்பதாகும்.

தற்போது இந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக 5 பேர் உள்வாங்கப்பட்டுள்ளமையோடு, அதில் ஒருவர் அமைச்சரின் செயலாளராக இருப்பதுடன், மற்றையவர் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் நிறைவேற்றுபணிப்பாளர் நியமிக்கப்படுவார். அத்துடன் மூன்று உறுப்பினர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார்கள்.

ஜனாதிபதியால் நியமிக்கப்படக்கூடிய உறுப்பினர்கள் அரசமைப்பு பேரவையின் அனுமதியுடன் நியமிக்கப்பட வேண்டும் என உள்ளது. இருப்பினும் அரசமைப்பு பேரவை என்பது கடந்த காலங்களில் பல தடவைகள் மாற்றப்பட்டு, இல்லாமல் செய்யப்பட்டு அதன் பிறகு நாடாளுமன்ற குழுவென அறிமுகப்படுத்தப்பட்டது .

ஆகவே இவ்வாறானதொரு நிலைமையில் அவ்வாறு மாற்றப்படுமாகவிருந்தால் ஜனாதிபதி, தான் விரும்பியவர்களை நியமிக்க கூடிய நிலைமை ஏற்படும்.

மேலும், நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் இவ்வாறானதொரு சட்டமூலம் அவசியமில்லை. குறிப்பாக அண்மையில் கொண்டு வரப்படவிருந்த புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்திலும் கூட ஊடகங்களை கட்டுப்படுத்தும் ஏற்பாடுகள் உள்ளன.

இந்நிலையில் இவ்வாறான சட்டங்கள் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்த திட்டமிடும் போது ஊடகங்கள் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டு அது ஜனநாயகத்துக்கு பாரியதொரு அச்சுறுத்தலாக அமையலாம் - என்றார். (05)

# அரசின் கடன் மறுசீரமைப்பு குறித்து தெரிவிக்கப்படும் பொய் பரப்புரைகள் தொடர்பில் அச்சப்படவேண்டாம்

## அகிலவிராஜ் கூறுகிறார்



தேசிய கடன் மறுசீரமைப்பின் மூலம் வங்கிகளுக்கோ பணம் வைப்பில் வைத்திருப்பவர்களுக்கோ எந்த பாதிப்பும் ஏற்படப்போவதில்லை.

இது தொடர்பாக தெரிவிக்கப்படும் பொய் பிரசாரம் தொடர்பில் யாரும் அச்சப்படதேவையயில்லை என ஐக்கிய தேசிய கட்சி உபதலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான் சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

வியாழக்கிழமை முதல் 5 நாள்களுக்கு வங்கி கட்டமைப்புகள், பங்குச் சந்தைகள் மூடி, அரசாங்கம் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையின் போது நிலையான வைப்பு வைத்திருப்பவர்களிடமிருந்து 20வீதம் அரசாங்கத்துக்கு பெற்றுக் கொடுக்கப்போவதாக நாட்டில் வதந்தி ஒன்று பரவி வருகிறது.

அவ்வாறு எதுவும் இல்லை. அதேநேரம் கடன் மறுசீரமைப்பின்போது வங்கிகளில் கணக்கு வைத்திருப்பவர்களுக்கோ நிலையான வைப்பு வைத்திருப்பவர்களுக்கோ எந்த பாதிப்பும் ஏற்படப்போவதில்லை என ஜனாதிபதி தெளிவாக தெரிவித்திருக்கிறார்.

அதே நேரம் சாதாரண மக்கள் வங்கிகளில் வைப்பிலிட்டிருக்கும் பணத்துக்கு அரசாங்கமோ அல்லது வேறு யாருமோ கை வைக்க முடியாது.

அதனால் இது அரசியல் நோக்கில் தெரிவிக்கப்படும் பொய் பிரசாரமாகும். சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தின் பிரகாரம் மேறகொள்ளப்போகும் ஒரு விடயம். அதனால் சாதாரண மக்களுக்கு பாதிப்பும் ஏற்படும் எந்த நடவடிக்கையையும் செயற்படுத்த முடியாது. அத்துடன் தேசிய கடன் மறுசீரமைப்பின்போது வங்கி கட்டமைப்புக்கோ சாதாரண மக்களின் வங்களில் இருக்கும் பணத்துக்கோ பாதிப்பு ஏற்படப்போவதில்லை என மத்திய வங்கி ஆளுநரும் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி தெரிவித்திருப்பதை நம்ப முடியாவிட்டால், மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்திருப்பதையாவது நம்ப முடியும் தானே?. அதனால் இது தொடர்பாக மக்கள் குழப்பமடையத் தேவையில்லை.

அத்துடன் கடன் மறுசீரமைப்பின் மூலம் வங்கிகளிடமிருந்து அரசாங்கம் பெற்றுக்கொண்டுள்ள கடன்கள் இருக்கின்றன. அது தொடர்பில் கலந்துரையாடி கடன் மீள செலுத்த வேண்டிய காரணத்தை நீடித்துக்கொள்வதற்கும் வட்டிவீதங்களை முடியுமான அளிவில் குறைக்க முடியுமானால் அதனை மேற்கொள்வதற்குமே அரசாங்கம் கடன் மறுசீரமைப்பின் மூலம் மேற்கொள்ளப்போகிறது. சாதாரணமாக நாங்கள் யாரிடமாவது கடன் பெற்றிருந்தால், அதனை உரிய காலத்துக்கு செலுத்த முடியாவிட்டால் அதற்கு ஒரு சிறிய நிவாரண காலம் வழங்கப்படுகிறது. அந்த நடவடிக்கையே தற்போது இடம்பெறுகிறது. அதனால் அரசாங்கத்தின் தேசிய கடன் மறுசீரமைப்பின் மூலம் வங்கிகளுக்கோ அல்லது வங்கிகளில் வைப்பிலிட்டிருக்கும் மக்களின் வைப்பு பணத்துக்கோ எந்தப் பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. இது தொடர்பில் மக்கள் வீணாக அச்சம் கொள்ளத்தேவையில்லை. -என்றார். (05)

# உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பாக தேவையற்ற அச்சத்தைப் போக்கவேண்டும்

## வங்கி ஊழியர்கள் தொழிற்சங்கம் கோரிக்கை

உள்நாட்டு கடன்மறுசீரமைப்பு நடவடிக்கை குறித்த தகவல்களால் அச்சமடைந்துள்ள உள்நாட்டு வைப்பாளர்களின் நம்பிக்கையை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும் என அகில இலங்கை வங்கி ஊழியர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

உள்நாட்டு கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகள் காரணமாக வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ள பணத்துக்கோ அல்லது வாடிக்கையாளர்களுக்கோ எந்த பாதிப்பும் ஏற்படாது என அகில இலங்கை வங்கி ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் ரஞ்சன் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக மக்கள் அச்சமடையத்தேவையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டு கடன் என்பது வங்கிகளுக்கும் நிறுவனங்களுக்கும் அரசாங்கம் வழங்கிய கடன் இவைகள் பிணைமுறிகள் போன்றவைகள்,என தெரிவித்துள்ள அவர் இந்த செயற்பாட்டைக் கையாள்வதற்கான நடைமுறைகள் வங்கிகளிடம் உள்ளன இதன் காரணமாக வங்கியில் வைப்பிலிடப்பட்ட பணத்துக்கும் வைப்பிலிட்டவர்களுக்கும் எந்த பாதிப்பும் ஏற்படாது என அவர் தெரிவித்துள்ளார்.

வங்கிகளில் வைப்பிலிட்டவர்கள் வங்கி அமைப்பு முறைமீது நம்பிக்கை இழக்கவேண்டிய அவசியமில்லை. இதனால் வங்கி அமைப்பு முறைக்கும் பாதிப்பு ஏற்படலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வெளிப்படைத்தன்மை அவசியம்

உள்நாட்டு கடன் மறுசீரமைப்புக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. லண்டன் மற்றும் பிரான்ஸ் நாடுகளுக்கான தனது பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய உடனே நேற்று அவசரமகக் கூட்டிய சிறப்பு அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த அனுமதி பெறப்பட்டுள்ளது.

பன்னாட்டுச் செலாவணி நிதியத்துடன் (ஐஎம்எவ்) ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கை ஒக்டோபர் மாதத்திற்கு முன்னர் தனது பன்னாட்டு மற்றும் இரதரப்புக் கடன்களை மறுசீரமைப்புச் செய்துகொள்ளவேண்டும்.

கடன்மறிசீரமைப்பு விடயத்தில் அனைத்துத் தரப்பினரும் சமமாக நடத்தப்படவேண்டும் என்பது கடன் வழங்குநர்தரப்புக்களின் முக்கிய கோரிக்கையாக, வலியுறுத்தலாக அமைந்துள்ளது. அதாவது கடன்களைத் தள்ளுபடி செய்வது போன்ற நடவடிக்கைகளில் கடன் வழங்குநர்களுக்கு இடையில் இலங்கை ஏற்றத்தாழ்வுகளோடு நடந்துகொள்ளக்கூடாது என்பதே அந்த வலியுறுத்தல்.

அதனடிப்படையில் தனது பன்னாட்டு கடன் மறுசீரமைப்புக்கு முன்னதாக உள்நாட்டுக் கடன்மறுசீரமைப்பைச் செய்து தன்னை நிரூபிக்கவேண்டிய கட்டாயத்தில் இலங்கை ஆட்சியாளர்கள் உள்ளார்கள். அதனாலேயே இப்போது அவசர அவசரமாக கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

உள்நாட்டு நிறுவனங்கள் மற்றும் வங்கிகளிடம் பெற்றுக்கொண்ட கடனை மீளச் செலுத்துவதற்கான எதிர்காலஏற்பாடுகள்மற்றும்கடன்தள்ளுபடிகள்குறித்து இதன் மூலம் ஆட்சியாளர்கள் அறிவிக்கவேண்டும்.

இலங்கை அரசு சுமார் 14 டிரில்லியன் கடன்களை உள்நாட்டு நிறுவனங்களிடம் இருந்து பெற்றுள்ளது. மத்திய வங்கி, அரச மற்றும் தனியார் வங்கிக் கட்டமைப்பு, ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் வேறு நிறுவனங்களிடம் இருந்தும் இந்தக் கடன் தொகை பெறப்பட்டுள்ளது. இது பன்னாட்டரங்கில் அரசு பெற்றுள்ள கடன்களைவிடவும் அதிகமான தொகை.

எனவே உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு என்பது வங்கிக் கட்டமைப்பு மற்றும் நாட்டின் நிதி வளங்கள் மீது தாக்கத்தைச் செலுத்தக்கூடியதாகவே இருக்கும். ஒரு தொகுதிக் கடன்களைத் தள்ளுபடி செய்தல், கடன்களைத் திருப்பிச் செலுத்தும் காலப் பகுதியை நீடித்தல், தவணைப் பணத்தை மீளச் செலுத்தும் காலப் பகுதியை இன்னும் சில வருடங்களுக்குத் தாமதப்படுத்துதல்., ஏற்கனவே இணங்கப்பட்ட வட்டி வீதத்தைக் குறைத்தல், வட்டிப் பணத்தில் ஒரு தொகுதியைத் தள்ளுபடி செய்தல் போன்ற ஒரு சிலநடவடிக்கைகளே கடன் மறுசீரமைப்பு விடயத்தில் ஆட்சியாளர்கள் முன்னுள்ள தெரிவு.

இதனால்தான் எந்தவொரு கடன்மறுசீரமைப்பு நடவடிக்கையும் வங்கிகளையும் ஊழியர் சேமலாப நிதி போன்ற நிதி வளங்களையும் பாதிக்கும் என்று கருதப்படுகின்றது. ஆனால் இந்த இரு துறைகளும் பாதிக்கப்படாது என்று அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்திருக்கிறார். மத்திய வங்கி ஆளுநரும் மீண்டும் மீண்டும் அதனைத் தெரிவிக்கின்றார்.

இருப்பினும் அரசு தனது உள்நாட்டு கடன்மறுசீரமைப்புத் திட்டத்தை இன்னும் வெளிப்படையாக அறிவிக்காத காரணத்தால் அது மீதான சந்தேகம் தொடரவே செய்கின்றது. அந்த நிலையை மாற்றி, அரசு என்ன செய்யப்போகின்றது என்பதைப் பகிரங்கப்படுத்தி அது தொடர்பான விரிவான கலந்துரையாடல்களை நடத்த ஆட்சியாளர்கள்முன்வரவேண்டும். அப்போதே மக்களின் அச்சத்தைப் போக்க முடியும் என்பதுடன் பொருளாதார நிச்சயமற்ற தன்மையையும் களையமுடியும்.

எல்லாவற்றையும் மூடுமந்திரமாக வைத்திருந்து, மக்களையும் நாட்டையும் குழப்பத்திற்குள்ளாக்காமல் ஆட்சியாளர்கள் வெளிப்படைத்தன்மையுடன் நடந்துகொள்வதே கடன்மறுசீரமைப்பு விடயத்தில் நன்மைபயக்கக்கூடியது.



# சொந்த நாட்டுக்குத் திரும்ப தயாராகிவரும் முத்து ராஜா

**தேபிந்த்**

நீண்ட தந்தங்களைக்கொண்ட தாய்லாந்து யானையான முத்து ராஜா மீண்டும் தனது சொந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்வதற்கான கடினமான பயணத்திற்குத் தயாராகி வருகின்றது. இதற்கென தாய்லாந்தில் இருந்த வந்திருக்கும் யானைப் பாகர்கள் உள்ளூர் பாகர்களுடன் இணைந்து முத்து ராஜாவைபெரிய இரும்புக்கூண்டுக்குள் அடைப்பதற்குப் பழக்கப்படுத்தி வருகின்றார்கள். நாள் ஒன்றுக்கு இரண்டு மணி நேரம் அந்தக் கூண்டுக்குள் அடைக்கப்பட்டு முத்து ராஜாவைப் பழக்கப்படுத்தி வருகின்றார்கள்.

இப்போது அந்தக் கூண்டை முத்துராஜாவுடன் சேர்த்து கிரேன் மூலம் தூக்குவதற்கானபயிற்சிகள் இடம்பெற்று வருகின்றன. முத்துராஜாவை விமானத்திற்குள் தூக்கி வைப்பதற்கு இந்தக் கிரேன் பயிற்சி அவசியமாக இருக்கின்றது. கூண்டுக்குள் எந்தக் குழப்பமும் இல்லாமல் முத்துராஜா அமைதியாக இருந்தால்தான் அதனால் தன் சொந்த மண்ணுக்குத் திரும்ப முடியும்.

தாய்லாந்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட முத்து ராஜா, இலங்கையில் சரிவரக் கவனிக்கப்படாமல், கேவலமாகநடத்தப்பட்டுநோய்வாய்ப்பட்டதாகக் குற்றஞ்சாட்டுக்களுக்கு உள்ளானதை அடுத்து அதனைத் தம்மிடமே திரும்பத் தந்துவிடும்படி தாய்லாந்து பிடிவாதமாக நின்றுகொண்டது.

இராஜதந்திர ரீதியில் இலங்கை ஆட்சியாளர்களுக்குஅசௌகரியங்களை ஏற்படுத்தியபோதும் தாய்லாந்து மன்னர் பிடிவாதமாக நின்றதை அடுத்து யானையைத்திருப்பிஅனுப்பஇலங்கை சம்மதித்தது.

தாய்லாந்து அதிகாரிகள் 29 வயதான முத்து ராஜாவை 2001 இல் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கினர். தெற்கில் உள்ள ஒரு புத்த கோவிலுக்கு அது வழங்கப்பட்டிருந்தது. அங்கு அது சித்திரவதை செய்யப்பட்டு கவனிக்காமல் விடப்பட்டதாக விலங்குநல ஆர்வலர் அமைப்பு குற்றஞ்சாட்டியது.

இதையடுத்து கொழும்பில் உள்ள தாய்லாந்துத் தூதுவர் அந்த விகாரைக்குச் சென்று யானையைப் பார்வையிட்டார். யானையின் பரிதாபநிலை குறித்து அவர் தனது தலைநகரத்துக்கு அனுப்பிய அறிக்கையின் விளைவாக யானையைத் திருப்பித் தருமாறு தாய்லாந்து கேட்கத் தொடங்கியது.

நவம்பரில் இலங்கை ஆட்சியாளர்கள் கோவிலில் இருந்து யானையை மீட்டெடுத்தபோது யானை வலி மற்றும் புண்களால் துடித்துக்கொண்டிருந்தது.

இந்த ஆட்சி பொறுப்பேற்ற பின்னர் கொழும்பின் புறநகரில் உள்ள ஒரு மிருகக்காட்சிசாலையில் யானைக்கு வைத்தியம் செய்யப்பட்டது. கடந்த ஒரு வருடத்தில் அதன் பெரும்பாலான காயங்கள்குணமடைந்துள்ளன,ஆனால் அதன் காலில் ஏற்பட்ட பாதிப்பிற்கு அதி நவீன நீர்ச் சிகிச்சை சிகிச்சை தேவைப்படுகிறது. அத்தகைய சிகிச்சை இலங்கையில் இல்லை.

இந்த வகை சிகிச்சைக்காக யானையை மீண்டும் தாய்லாந்திற்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று யானையின் ஆரோக்கியத்தைத் தற்போது கண்காணிக்கும் கால்நடைமருத்துவர் மதுஷா பெரேரா தெரிவித்தார்.

இந்த யானை தவறாக நடத்தப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில் கொழும்பின் வருத்தத்தை தாய்லாந்து மன்னரிடம்தான் தனிப்பட்ட முறையில் தான் தெரிவித்தார் என்று இலங்கைப் பிரதமர் தினேஷ் குணவர்தன இந்த மாதம் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். இதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்ப முடிந்ததாக அவர் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள தாய்லாந்துத் தூதுவர் கடந்த ஆண்டு முத்து ராஜாவை கோவிலுக்கு சென்று பார்வையிட்டதையடுத்து, யானைக்கு உடல் நலம் குன்றியதை கண்டறிந்ததையடுத்து, யானை திரும்பவேண்டும்என்றகோரிக்கையில் தாய்லாந்து பிடிவாதமாக இருப்பதாக வனவிலங்குத்துறைஅமைச்சர்பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

4,000 கிலோ எடையுள்ள முத்து ராஜாவைநான்குதாய்லாந்துப்பாகர்கள், தாய்லாந்தின் ஷங் மாய் நகரத்திற்கு ஜூலை முதலாம் திகதி விமானம் மூலம் அழைத்துச் செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. விமானப் பயணத்திற்குத் தயார்ப்படுத்தும் வகையில் கப்பல் கொள்கலன் அளவிலான பெரிய கூண்டிற்குள் நிற்க அதற்கு இப்போது பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது..

தாய்லாந்து சுற்றுச்சூழல் அமைச்சர் வரவுத் சில்பா–ஆர்ச்சா முத்து ராஜாவின் உடல் நலம் குறித்தே தமது நாடு அக்கறைப்படுவதாகத் தெரிவித்தார்.

முன்புஎன்னநடந்தது,எங்களுக்குத் தெரியாது என்று அவர் இந்த மாதம் செய்தியாளர்களிடம் கூறினார். மிக முக்கியமான விடயம் சாக் சுரின் (முத்து ராஜாவின் தாய்லாந்துப் பெயர்) ஆரோக்கியம்தான் என்றார்.

அதேநேரம் தாய்லாந்து ஆட்சியாளர்கள்யானைகளைவெளிநாடுகளுக்கு அன்பளிப்பாக அனுப்புவதை நிறுத்தி விட்டதாகவும், அதன் தூதரகப் பணியாளர்கள்,ஏற்கனவேவெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட யானைகளின் நிலையை இப்போது கண்காணித்து வருவதாகவும் அவர் கூறினார்.

முத்துராஜாவைகோயிலில் இருந்து மீட்பதற்கான பரப்புரைக்குத் தலைமை தாங்கிய விலங்குகள் உரிமைகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கான அணிவகுப்பு என்ற அமைப்பானது யானை இலங்கையைவிட்டுப் புறப்படுவதைப் பற்றி மகிழ்ச்சியடையவில்லை.

முத்து ராஜா இலங்கையில் பணியிலிருந்து ஓய்வு பெற்று நன்றாக ஓய்வெடுக்க வேண்டும் என்பதே எங்கள் விருப்பம் என்று அரிய நிர்வாக இயக்குனர் பாஞ்சாலி பனாபிட்டிய கூறினார். அதற்கு சுதந்திரம் தேவை என்றார் அவர்.

முத்து ராஜா விடயத்தில் தாய்லாந்து ஆட்சியாளர்களின்தலையீட்டிற்குநன்றி தெரிவித்தார். அவரர்கள், யானையின் உயிரைக் காப்பாற்றியதற்காகப் பெருமைப்படுகிறார் எனவும் கூறினார்.

தாய்லாந்து ஆட்சியாளர்கள் தலையிடாவிட்டால் யானை இப்போது இறந்திருக்கும் என்று பாஞ்சாலி தெரிவித்தார்.

அடுத்த தாய்லாந்து பிரதமருக்கு எங்களின் வேண்டுகோள், முத்து ராஜாவைக் கட்டிப்போடாமல் சுதந்திரமாக வைத்திருக்கவேண்டும் என்பதே. அது தன்பாட்டில் தன் விருப்பத்திற்கு அனுமதிக்கவேண்டும் என்றார்.

தாய்லாந்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட முத்து ராஜா, இலங்கையில் சரிவரக் கவனிக்கப்படாமல், கேவலமாக நடத்தப்பட்டு நோய்வாய்ப்பட்டதாகக் குற்றஞ்சாட்டுக்களுக்கு உள்ளானதை அடுத்து அதனைத் தம்மிடமே திரும்பத் தந்துவிடும்படி தாய்லாந்து பிடிவாதமாக நின்றுகொண்டது. இராஜதந்திர ரீதியில் இலங்கை ஆட்சியாளர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தியபோதும் தாய்லாந்து மன் னர் பிடிவாதமாக நின்றதை அடுத்து யானையைத் திருப்பி அனுப்ப இலங்கை சம்மதித்தது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chicken Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swhepees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டோருக்கான நீதியை உறுதிசெய்க அரசிடம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தல்

இலங்கை அரசு கொண்டிருக்கும் சர்வதேச கட்டுப்பாடுகளுக்கு அமைவாக சித்திரவதைகளால் பாதிக்கப்பட்ட தரப்பினர்நீதியைப்பெற்றுக்கொள்வதற்கும், அவர்கள் முகங்கொடுத்த அநீதியிலிருந்து முழுமையாக மீள்வதற்கு அவசியமான புனர்வாழ்வளித்தல் செயன்முறை உரியவாறு பூர்த்திசெய்யப்படுவதற்கும் அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு வலியுறுத்தியுள்ளது.

சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டோருக்கான ஆதரவு தொடர்பான சர்வதேச தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ளஅறிக்கையிலேயேமனிதஉரிமைகள் ஆணைக்குழு மேற் கண்டவாறு வலியுறுத்தியுள்ளது.

அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு -

சித்திரவதைகளிலிருந்து விலக்கீடு பெறுதல் என்பது எந்தவொரு சூழ்நிலையிலும் மட்டுப்படுத்தப்படமுடியாத மனித உரிமையாகும்.

இருப்பினும் இலங்கையிலும் உலகளாவிய ரீதியிலும் உளவியல் மற்றும் உடலியல் ரீதியான சித்திரவதைகள் தொடர்ந்து இடம்பெற்றுவருகின்றன.

இந்த மிகமோசமான மனித உரிமை மீறலின் பாரதூரமான பின்விளைவுகளை சித்திரவதைக்கு உள்ளான தரப்பினர் மாத்திரமன்றி, அவர்களது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் நேரில் பார்த்த சாட்சியங்களும் அனுபவிக்கவேண்டியுள்ளது.

எனவே சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டோருக்கான ஆதரவு தொடர்பான சர்வதேச தினத்தில் மேற்குறிப்பிட்டவாறு பாதிக்கப்பட்டதரப்பினர்,அவர்களதுகுடும்பத்தினர் மற்றும் சாட்சியங்களுக்கு அவசியமான ஆதரவு அனைத்து வழிகளிலும் வழங்கப்படுவதை உறுதிசெய்யவேண்டுமென மீளவலியுறுத்துகின்றோம்.

நாம் எமது விசாரணை செயன்முறையின் ஊடாக எமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்கீழ் சித்திரவதைகளால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான நியாயத்தையும், இழப்பீட்டையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றோம்.

இருப்பினும் பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் அவர்களின் குடும்பத்தாருக்கு இழப்பீட்டுக்கு அப்பால், அவர்கள் முழுமையாக மீள்வதற்கு அவசியமான உளவியல் ஆலோசனை வழங்கல் மற்றும் புனர்வாழ்வளித்தல் என்பன அவசியமாகின்றன.

அதேவேளை ஒடுக்குமுறைகள் தொடர்பான அச்சம் மற்றும் கடந்தகாலங்களில் பதிவாகியுள்ள தண்டனைகளிலிருந்து விலக்கீடு பெறும் போக்கு என்பவற்றின் காரணமாக சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டவர்களும், சாட்சியங்களும் அநேக சந்தர்ப்பங்களில் நீதிக்கட்டமைப்பை அணுகுவதிலிருந்து விலகியிருக்கின்றனர்.

எனவே, இலங்கை அரசு கொண்டிருக்கும் சர்வதேச கடப்பாடுகளுக்கு அமைவாக எவ்வித ஒடுக்குமுறைகளுமின்றி பாதிக்கப்பட்ட தரப்பினர் நீதியைப் பெற்றுக்கொள்வதற்கும்,அவர்கள்முகங்கொடுத்த அநீதியிலிருந்து முழுமையாக மீள்வதற்கு அவசியமான புனர்வாழ்வளித்தல் செயன்முறை உரியவாறு பூர்த்தி செய்யப்படுவதற்கும் அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்துகின்றோம். அதுமாதிரமன்றி பாதிக்கப்பட்ட தரப்பினருக்குரிய மருத்துவ, சட்ட, சமூகமற்றும்உளவியல்சார் உதவிகளை வழங்குவதை முன்னிறுத்தி சமூக நலனோம்பு அமைப்புக்கள், விசேட நிபுணர்கள், தனிநபர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயலாற்ற முன்வரவேண்டும் என்றும் சுட்டிக்காட்டுகின்றோம் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# கடன் மறுசீரமைப்புக்கு இலங்கை முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவோம்

## பிரதமரிடம் சீனா உறுதி



கடன் மறுசீரமைப்பு மற் றும் பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்கு இலங்கை முன்னெடுத்துள்ள முயற்சிகளுக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்கப்படும் என்று சீனா உறுதியளித்துள்ளது.

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ ன்ஹொங் மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோருக்கிடையிலான சந்திப்பு அலரி மாளிகையில் இடம்பெற்றது.

இதன் போதே சீனத் தூதுவர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு நீண்டகால தீர்வுகளாக சீனாவிலிருந்து நேரடிமுதலீடுகள்எதிர்பார்க்கப்படுகின்றன என சீனத்தூதுவரிடம் தெரிவித்துள்ள பிரதமர் , விவசாயம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, தகவல் தொழில்நுட்பம், கல்வி மற்றும் நீர் வழங்கல் துறைகளிலும் முதலீடுகள் எதிர்பார்க்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

புதிய முதலீட்டுத் திட்டங்கள், சீனாவுடனான வர்த்தக விரிவாக்கம், கொழும்பு துறைமுக நகரம், அம்பாந்தோட்டைதுறைமுகம், வறுமைஒழிப்புத் திட்டங்கள், கல்வி, விவசாயம், கலாசாரப் பரிமாற்றங்கள், உயர்மட்ட உறவுகள், பின்தங்கியவர்களுக்கான உதவிகள் உள்ளிட்ட பல முக்கிய காரணிகள் தொடர்பில் இதன் போது அவதானம் செலுத்தப்பட்டது.

சீனாவின் யுனான் மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படும் அதிக அறுவடை தரக்கூடிய அரிசி வகைகளை அறிமுகப்படுத்தி இலங்கையில், அரிசி உற்பத்தியை அதிகரிக்க கிராமப்புற மக்களுக்கு ஆதரவளிக்குமாறு பிரதமர் சீனத் தூதுவரிடம் விசேட கோரிக்கை ஒன்றை இதன் போது முன்வைத்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு முன்னெடுத்துள்ள முயற்சிகள் மகிழ்ச்சியளிக்கின்றன எனவும், கடனை மறுசீரமைப்பதற்கும் பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்கும் இலங்கையின் தற்போதைய முயற்சிகளை எதிர்கொள்ள சீனாவின் தொடர்ச்சியான ஆதரவை உறுதிப்படுத்துவதாகவும் தூதுவர் குறிப்பிட்டுள்ளார். பதுளை, புத்தளம் போன்ற தொலைதூர பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளுக்குச் சென்று கல்வித் தேவைகளை வழங்க திட்ட மிட்டுள்ளதாகவும் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதாரநெருக்கடியைத்தணிப்பதில் சீனா வழங்கும் ஆதரவுகளுக்கு நன்றி தெரிவித்த பிரதமர், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட சர்வதேச மாநாடுகளில் இலங்கையின் இறையாண்மையை உறுதிப்படுத்துவதற்கான சீனாவின் நிலைப்பாடு தொடர்பிலும் நன்றி தெரிவித்தார். (05)

# வெளிநாட்டில் வேலைவாய்ப்பு தருவதாகக்கூறி பண மோசடி

## 7 பேர் கைது

கனடா மற்றும் ஓமானில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாகக்கூறி பண மோசடி செய்த 5 பெண்கள் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கனடாவிற்கு மாணவர் விசா வழங்குவதாக கூறி பண மோசடி செய்த 6 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற பல முறைப்பாடுகளின் அடிப்படையில் கொழும்பு நிதி குற்றத்தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னரே குறித்த குழுவினர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கோட்டை நீதிவான் நீதிமன்றில் இருந்து தேடுதல் உத்தரவைப் பெற்றுக் கொண்ட பொலிஸ் அதிகாரிகள் கடவத்தையில் விசா நடைமுறைக்கு போலி ஆவணங்களை வழங்கும் வர்த்தகத்தை மேற்கொண்டு வந்த கட்டடமொன்றை சுற்றி வளைத்துள்ளனர்.

இதன்போது 3 கணனிகள், 3 மடிக்கணினிகள், 4 அச்சு இயந்திரங்கள், ஸ்கேனர் இயந்திரம், பல நிதி அறிக்கைகள், கடவுச்சீட்டுகள், போலி ஆவணங்கள், உத்தியோகபூர்வ முத்திரைகள் மற்றும் 1,187,130 ரூபா பணம் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் சீதுவை பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய ஒருவரும், வத்தளை, ராகம மற்றும் களனி பிரதேசங்களைச் சேர்ந்த 47, 45, 31, 28 மற்றும் 23 வயதுடைய ஐந்து பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

வெளிநாட்டுவிசாக்களை நாடும் நபர்களுக்கான நிதி நிலை அறிக்கைகள் மற்றும் சொத்து தொடர்பிலான அறிக்கைகள் உள்ளிட்ட போலி ஆவணங்களை இந்தக்குழுவினர் உருவாக்கியுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

கொழும்பு நிதி குற்றத்தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, முறையான அனுமதிப்பத்திரமின்றி ஓமானில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடி செய்த ஒருவர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வு பிரிவின் அதிகாரிகளால் ; ஹெட்டியாராச்சி, மாகொல பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஓமானில் வேலை வாய்ப்பு பெற்றுத்தருவதாகக் கூறி ஒருவரிடம் இருந்து 390,000 ரூபாவை பெற்றுக் கொண்டு வேலை பெற்றுக் கொடுக்கப்படவில்லை என பணியகத்திற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அதற்கமைவாக சந்தேகநபர் வாக்குமூலத்தைப் பதிவு செய்வதற்காக பணியகத்திற்கு அழைக்கப்பட்டு வாக்குமூலத்தைப் பதிவு செய்த பின்னர் அவர் கைது செய்யப்பட்டார்.

இருப்பினும், சந்தேக நபர் புதுக்கடை நீதிமன்றில் ஆஜர்படுத்திய பின்னர் 10 லட்சம் ரூபா பிணையில் விடுவிக்குமாறு நீதவான் உத்தரவிட்டதுடன், வழக்கு ஜூலை 7ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. (05)

# விசேட தேவையுடையவர்களுக்கான சாரதி அனுமதிப்பத்திர அறிவித்தல்




விசேட தேவையுடையவர்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு அனுமதி வழங்குவதற்கு போக்குவரத்து மருத்துவ நிறுவனங்களின் வைத்தியர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

விசேட தேவையுடைய சுமார் 6 லட்சம் பேரின் உடல் தகுதிக்கு மருத்துவர்கள் ஒப்புதல் அளிக்காததால் இதுவரை சாரதி உரிமம் பெற முடியவில்லை.

எனவே, வைத்தியர்களின் இந்த உடன்படிக்கையுடன், அவர்கள் சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கான பரிந்துரைகள் அடங்கிய விசேட அறிக்கையொன்று இம்மாத இறுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

விசேட தேவையுடையவர்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து பரிந்துரைகளைவழங்குவதற்காகஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவினால் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

விசேடதேவையுடையவர்களுக்கான சாரதிஅனுமதிப்பத்திரம்பெறுவதற்கு இருந்த தடைகள் அனைத்தும் நீக்கப்பட்டுள்ளன என கம்பஹா மாவட்ட சபை உறுப்பினர் அஜித் மன்னப்பெரும தெரிவித்தார்.

மேலும், தற்போதைய சட்டத்தின்படி, எந்தவொரு அரசாங்க பதிவு செய்யப்பட்ட வைத்தியரிடமும் உடற்தகுதி சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியும் எனவும், அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள போக்குவரத்து ஆணையாளர் நாயகத்துக்கு அதிகாரம் இருப்பதாகவும், அது தொடர்பான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை ஜனாதிபதிக்கு வழங்கப்படும் எனவும் தலைவர் குறிப்பிட்டார்.

இவர்களுக்குசாரதிஅனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு தற்போதுள்ள சட்டத்தில் எவ்வித மாற்றமும் செய்ய வேண்டிய அவசியமில்லை என அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# போலி மாணிக்கக் கற்களை கொடுத்து நகைகள் மோசடி

## களுத்துறையில் ஒருவர் கைது



போலி மாணிக்கக் கற்களைக் காட்டி மக்களை ஏமாற்றி தங்க நகைகளைப் பரிமாறிக்கொண்ட மூன்று பேர் கொண்ட ஒழுங்கமைக்கப்பட்ட குழுவொன்றின் பிரதான சந்தேகநபரைக் கைது செய்ததாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

மெட்டியகொட, நிந்தன பிரதேசத்தைச்சேர்ந்த 40 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் மேலும் இருவருடன் இணைந்துபோலிஇரத்தினக்கற்களை வழங்கி அதற்குப் பதிலாக பெறுமதியான தங்க நகைகளைப் பெற்றுக் கொண்டதாக காலி மற்றும் களுத்துறையில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர். சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் இவர்களிடமிருந்து வைப்பற்றப்பட்டன எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# அஸ்வெசும போராட்டத்துக்கு மத்தியில் தேசிய கடனை மறுசீரமைக்க முயற்சி

## உதய கம்மன்பில கூறுகிறார்

சர்வதேச பிணைமுறி வழங்குநர்களின் கோரிக்கைக்கு அமையவே அரசாங்கம் தேசிய கடன்களை மறுசீரமைக்கத் தீர்மானித்துள்ளது.

தேசிய கடன்களை மறுசீரமைக்குமாறு சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை விதிக்கவில்லை. அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாட்டுக்கு எதிராக நாட்டு மக்கள் அணி திரள வேண்டும் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

அஸ்வெசும நலன்புரி செயற்திட்டத்துக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில் மக்களின் கவனத்தைத் திசை திருப்பி இரகசியமான முறையில் தேசிய கடன் மறுசீரமைப்பை நாடாளுமன்றத்தின் ஊடாக இறுதிப்படுத்த ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.



நாட்டுக்கு எதிரான ஒருதீர்மானத்தை செயற்படுத்தும் போது மக்களின் கவனத்தை திசைத்திருப்ப பிறிதொரு விடயத்தை முன்னிலைப்படுத்துவது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒன்றும் புதிய விடயமல்ல.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் இனங்களுக்கு இடையில் முரண்பாடுகள் தோற்றம்பெற்றபோது அந்த சந்தர்ப்பத்தில் நாடாளுமன்றத்தின் ஊடாக நாட்டுக்கு எதிரான தீர்மானங்கள் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டன.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய தேசிய கடன் மறுசீரமைக்கப்படுவதாக அரசாங்கம் குறிப்பிடுகின்றமை அடிப்படையற்றது. சர்வதேச பிணைமுறி வழங்குநர்களின் கோரிக்கைகளுக்கு அமையவே தேசிய கடன் மறுசீரமைக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

தேசிய கடன் மறுசீரமைக்கப்பட்டால் வங்கி கட்டமைப்பு நிச்சயம் பாதிக்கப்படும். ஆகவே அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாட்டுக்கு எதிராக நாட்டு மக்கள் அனைவரும் அணிதிரள வேண்டும். - என்றார்.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# அரசின் தேசிய கடன் மறுசீரமைப்பின் பின்னணியிலுள்ள இரகசியம் என்ன?

## ரஞ்சித் மத்தும பண்டார கேள்விக்கணை



உள்நாட்டுயுத்தம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் கூட ஞாயிற்றுக்கிழமை நாடாளுமன்ற அமர்வுகள் இடம்பெற்றதில்லை. அவ்வாறிருக்கையில் தேசிய கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் அரசாங்கம் எதற்காக இவ்வாறு வழமைக்கு மாறான நடவடிக்கைகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறது? இதன் பின்னணியிலுள்ள இரகசியம் என்ன என ஐக்கிய மக்கள் சக்தி கேள்வியெழுப்பியுள்ளது.

இவ்வாறான தீர்மானங்களின் ஊடாக அரசாங்கம் மக்களையும் , நாடாளுமன்றத்தையும் ஏமாற்ற முயற்சிக்கின்றதா என்ற சந்தேகம் நிலவுவதாகவும் ஐக்கிய மக்கள் சக்தி குறிப்பிட்டுள்ளது.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் கைசாத்திடப்பட்ட போது தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் எந்தவொரு விடயமும் தெரிவிக்கப்படவில்லை. நிதி இராஜாங்க அமைச்சர் ஹொன் சேமசிங்கவும், மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்கவும் தேசிய கடன் மறுசீரமைக்கப்பட மாட்டாது என்றே ஆரம்பம் முதல் தெரிவித்து வந்தனர். ஆனால் தற்போது வங்கிகளையும், பங்குசந்தைகளையும் 5 நாள்களுக்கு தொடர்ச்சியாக மூடி இது குறித்த யோசனையை நிறைவேற்றிக் கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எந்த வகையான விசேட சட்டங்கள் கொண்டு வரப்பட்டாலும் , எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஞாயிற்றுக்கிழமை நாடாளுமன்ற அமர்வுகள் இடம்பெற்றதில்லை. வடக்கு, கிழக்கு யுத்தம் அல்லது ஜே.வி.பி. இனக்கலவரத்தின் போது கூட ஞாயிற்றுக்கிழமை நாடாளுமன்றம் கூட்டப்படவில்லை. அவ்வாறு இதில் என்ன சிறப்பம்சம் காணப்படுகிறது? அரசாங்கம் எதை மறைக்க முயற்சிக்கிறது?

கட்சி தலைவர் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை கூட்டம் வழமைக்கு மாறான தினத்தில் இடம்பெறுகிறது. தேசிய கடன் மறுசீரமைப்பிலுள்ள இரகசியம் என்ன? மக்களையும் , நாடாளுமன்றத்தையும் ஏமாற்றி அரசாங்கம் ஏதேனும் பாரதூரமான தீர்மானத்தை எடுக்கவுள்ளதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. இது தொடர்பில் எந்தவொரு விடயத்தையும் அறி யாமல் எம்மால் எவ்வாறு ஒத்துழைப்பு வழங்க முடியும். இவ்வாறு அரசாங் கத்துக்கு அதன் போக்கில் செயற்பட இடமளிக்க முடி யாது. அரசாங்கத்துக்கு நிலையான கொள்கையொன்று இல்லை. ஆனால் எதிர்க்கட்சியான நாம் ஸ்திரமான நிலைப்பாட்டுடன் செயற்படுவோம். ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றிடமிருந்து 40 வீதமும், வங்கிகளிடமிருந்து 40 சதவீதமும் அரசாங்கம் கடன் பெற்றுள்ளது. இவை தொடர்பில் அரசாங்கம் என்ன தீர்மானங்களை எடுக்கும் என்பதே தற்போதுள்ள பிரச்சினையாகும். - என்றார். (05)

# இலங்கையின் நல்லிணக்க நடவடிக்கைகளுக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கவேண்டும்

## கனடா தமிழர்களிடம் இலங்கை தூதரகம் கோரிக்கை



இலங்கையின் நல்லிணக்க மற்றும் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளில் கனடாவில் உள்ள தமிழ் மக்கள் ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கவேண்டும் என கனடாவிற்கான இலங்கை தூதரகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கனடாவின் ஸ்காா்புரோவில் உள்ள இந்து ஆலயத்தின் தேர்த் திருவிழாவில் கலந்துகொண்ட இலங்கை தூதரகஅதிகாரி இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

கனடாவின் மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாநாகர சபை உறுப்பினர்கள் 1500 இற்கும் மேற்பட்ட பக்தர்கள் உட்பட பெருமளவானவர்கள் இந்த தேர்த்திருவிழாவில் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய இலங்கை தூதரக அதிகாரி, கனடாவில் உள்ள தமிழ்சமூகம் கனடாவின் பொருளாதாரம் மற்றும் கலாசாரத்தில் ஆற்றல்மிக்க சக்தியாக மாறியுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

கனடாவின் வலுவான தமிழ் வர்த்தக சமூகமும் மிகச்சிறப்பான கல்வியை கொண்டுள்ள இளம்தமிழ் தொழில் துறையினரும் கனடா சமூகத்திற்குள் தமிழ்மக்களை இணைப்பதற்கான உந்துசக்தியாக உள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இலங்கையின் அனைத்துசமூகத்தினருக்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ள நல்லிணக்க பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளில் கனடா தமிழ் சமூகம் தனது ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கவேண்டும் என தூதரக அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார். (05)

# உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு அரசியல் மற்றும் பொதுமக்களின் ஆதரவு அவசியம்

## இலங்கை வர்த்தக சம்மேளனம் வலியுறுத்து

இலங்கையின் உள்நாட்டு கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு அரசியல்தலைவர்களும் பொதுமக்களும் ஆதரவளிக்கவேண்டும் என இலங்கை வர்த்தக சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையின் அனைத்து அரசியல்கட்சிகளும் இந்த விடயத்தில் தொடர்புபட்ட அனைத்து பங்குதாரர்களும் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும். உத்தேச கடன்மறுசீரமைப்பு திட்டத்தின் இறுதிவடிவிற்காக காத்திருக்கவேண்டும் என இலங்கை வர்த்தக சம்மேளனம் வேண்டுகோள் விடுத் துள்ளது. இது ஒட்டுமொத்த கடன்பேண்தகு நிகழ்சிநிரலை நோக்கிய ஒரு முக்கியமான நடவடிக்கை என குறிப்பிட்டுள்ள இலங்கை வர்த்தக சம்மேளனம், இதனுடன் தொடர்புபட்ட ஏனைய முக்கிய சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கும் இது முக்கியம் எனவும் தெரிவித்துள்ளது.

நிதி அமைப்பின் ஸ்திர தன்மையை பேணுவதற்கே முன்னுரிமை வழங்கப்படும் வங்கிகளில் பணத்தை வைப்புசெய்தவர்கள் மோசமாகபாதிக்கப்படாமலிருப்பதும் உறுதிசெய்யப்படும் எனவும் இலங்கை வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை முன்னெடுக்கப்போவதாக அறிவித்த பின்னர் பலகடும்கரிசனைகள் வெளியாகியுள்ளன, இந்த கரிசனைகளை நாங்கள் புரிந்துகொள்கின்றோம், வெளிப்படையான கலந்துரையாடல்களுக்கான உரிமைகளை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம் எனவும் தெரிவித்துள்ளது. (05)

# கையடக்க தொலைபேசி திருடிய குற்றம்: யாழ். திருநெல்வேலியில் இளைஞன் கைது

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பரமேஸ்வரா சந்திக்கு அருகில் தொலைபேசி திருத்தகம் ஒன்றில், கையடக்க தொலைபேசியை திருடிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

திருத்தகத்திற்கு திங்கட்கிழமை வந்த இளைஞன் அங்கிருந்த கையடக்க தொலைபேசி ஒன்றைத் திருடி சென்றுள்ளார்.

அதனை கடை உரிமையாளர் கடையில் பொருத்தப்பட்டு இருந்த கண்காணிப்பு கமெராவில் கண்டதை அடுத்து, கண்காணிப்பு கமரா வீடியோ பதிவுடன் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலி ஸார் வீடியோ பதிவு ஊடாக இளைஞனை அடையாளம் கண்டு, இளைஞனை கைது செய்தனர்.

கைது செய்யப் பட்ட இளைஞனிடம் விசாரணைகளை முன்னெடுத்த போது, திருடிய கையடக்க தொலைபேசியை தான் 10 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்தார் எனவும், வாங்கியவரை தனக்கு அடையாளம் தெரியாது எனவும் கூறியுள்ளார்.

குறித்த நபரிடம் கையடக்க தொலைபேசியை வாங்கிய நபர் தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ள நிலையில் , கைது செய்யப்பட்டுள்ள நபரிடமும் தொடர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

# 500 மில்லியன் டொலரை உலக வங்கி வழங்கும்




அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுப்பதற்காக 500 மில்லியன் டொலர் கடனுதவியை இலங்கைக்கு வழங்க உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

இரு கட்டங்களாக இந்த கடனுதவியைப் பெற்றுக் கொள்வதற்காக உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி சங்கத்துடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு வரை 2 ஆண்டுகளுக்கான அபிவிருத்தி வேலைத்திட்ட கொள்கையின் கீழ் உலக வங்கியின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கான பேச்சு கடந்த மே மாதம் 17ஆம் திகதி இடம்பெற்றது.

குறித்த வேலைத்திட்டத் கீழ் இவ்வாண்டுக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு 500 மில்லியன் டொலர் கடனுதவியை இலங்கைக்கு வழங்க உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

இரு கட்டங்களாக வழங்கப்படவுள்ள இந்த கடனுதவியில் முதல்கட்டமாக 371.2 மில்லியன் டொலர் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது. இந்தக் கடனைப் பெற்றுக் கொள்வதற்கான சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதி, இலங்கை மத்திய வங்கியின் இணக்கப்பாடும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்கமைய இந்த கடனுதவியைப் பெற் றுக் கொள்வதற்காக உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி சங்கத்துடன் ஒப்பந்தத்தில் கைசாத்திடுவதற்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (05)

## மட்டக்களப்பில்

# மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் சாவு

மட்டக்களப்பு மாவட்டம், ஓட்டமாவடி மேற்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட காவத்தமுனையில் மீனவர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

காவத்தமுனையைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 54 வயதுடைய முத்துவான் அன்சார் என்ற குடும்பஸ்த்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வழக்கம் போல் செவ்வாய்க்கிழமை ஓட்டமாவடி ஆற்றிலுள்ள ஆமை ஓடை குடாவில் மீன் பிடிக்கச் சென்றவர் வீடு திரும்பாததால் அவரைத் தேடும் பணியில் உறவினர்கள் ஈடுபட்டபோது அவர் இறால் பண்ணைக்கு அருகாமையிலுள்ள நீரோடையில் உயிரிழந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பாக வாழைச்சேனைப் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

கவத்தமுனை பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள தனியாருக்குச் சொந்தமான இறால் பண்ணையின் பாதுகாப்பு கருதி மின்சாரம் வேலி இணைக்கப்பட்டுள்ளது. குறித்த மின்சார வேலியானது இறால் பண்ணைக்கு அப்பாலுள்ள நீரோடைக்குக் குறுக்காவும் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த ஓடையில் பொதுமக்கள் தங்களது நாளாந்த உணவுக்காக மீன் பிடிப்பது வழக்கமாகும். விடயம் தெரியாத நபர் இந்த மின்சார வேலியில் அகப்பட்டு உயிரிழந்துள்ளார் என்று பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

குறித்த இறால் பண்ணை உரிமையாளர் சட்டவிரோதமாக அமைத்துள்ள மின்சார வேலிக்கு எதிராக அங்கிருந்தவர்கள் விசனம் தெரிவித்து எதிர்ப்பில் ஈடுபட்டனர். இறால் பண்ணை தவிர்ந்த பொதுமக்கள் பாவிக்கும் பொது இடங்களில் மின்சாரம் வழங்குவதைத் தடுக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை, கடந்த காலத்தில் குறித்த இடத்தில் மின்சாரம் தாக்கி யானை ஒன்றும், 3 கால்நடைகளும் இறந்துள்ளன என்றும் பொது மக்கள் கூறினர். (02)



# தொட்டிலில் கழுத்து இறுகி 9 வயது சிறுவன் உயிரிழப்பு

## நாவலப்பிட்டியில் சோகம்

தொட்டிலில் கழுத்து இறுகி 9 வயது சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தத் துயரச் சம்பவம் நாவலபிட்டி, மொன்றிகிறிஸ்ரோ தோட்டத்தில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

வீட்டிலிருந்த சிறு குழந்தைக்காகச் சேலையில் கட்டப்பட்டிருந்த தொட்டிலில் குறித்த சிறுவன் விளையாடிக் கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் நாவலப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02)

# யாழில் ஐஸ் போதைப்பொருள் நுகர்ந்த இளைஞர் ஒருவர் சாவு

யாழ்ப்பாணத்தில் அதிகளவான ஐஸ் போதைப்பொருளை நுகர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். பண்டத்தரிப்பைச் சேர்ந்த குறித்த இளைஞர் ஐஸ் போதைப்பொருளை நுகர்ந்த நிலையில் அவருக்கு நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளது.

அதையடுத்து அவர் சங்கானை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் இளவாலைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (02)

# கிளிநொச்சியில் துப்பாக்கிச்சூடு!

## ஒருவர் படுகாயம்

கிளிநொச்சி – உதயநகர் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

காரில் பயணித்தவர்களை இலக்கு வைத்தே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவர், துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தியுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சம்பவத்தில் படுகாயமடைந்த 38 வாயதான நபர் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். 02)

காலைக்கதிர்
Kalaikkathir

# நலன்புரி கொடுப்பனவில் காணப்படும் குறைபாடுகளைத் நீக்க நடவடிக்கை

## திலீபன் எம்.பி. உத்தரவாதம்



நலன்புரிக் கொடுப்பனவுகளில் தற்போது எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடித் தீர்மானமொன்று எட்டப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் குறிப்பிட்டுள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவி-யலாளர்களின் கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

'நலன்புரிக் கொடுப்பனவுச் செயற்றிட்டம் தொடர்பில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஜனாதிபதியால் கொண்டு வரப்பட்ட திட்டம் நல்ல பயனுள்ள திட்டமாகும்.

அதற்காக ஜனாதிபதி கிராமம் கிராமமாக சென்று பதிவு எடுக்கமுடியாது. அதனால் அந்த பொறுப்பு பிரதேச செயலாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டது.

ஏற்கனவே உள்ள சமுர்த்தி பட்டியலை எடுத்து அதில் உள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்கள், விசேட தேவைக்குட்பட்டோர், முதியோர் பெயர்களை தெரிவுசெய்து அதன் பின்னர் கிராமங்களுக்கு சென்று பார்வையிட்டு பதிவு செய்து அதன் பின்னர் ஏனைய-வர்களை பதிவு செய்திருக்க வேண்டும். ஆனால் பிரதேச செயலாளர்கள் கண்காணிப்பற்று மேற் பார்வை செய்-யாமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

கிராமசேவகர், சமுர்த்தி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கங்கள் போராட்டங்களை நடத்தி இந்த வேலைத்திட்டத்தை செய்ய விடாமல் பூதாகாரமாக்கி உள்ளன.

இந்த திட்டத்தினை ஆழமாக ஆராய்ந்தால் இதனுடன் கொண்டு வரப்பட்ட பிழையான தகவலை தரும் அரச உத்தியோகத்தர்களுக்கு 10000 ரூபா தண்டம் அல்லது ஒரு வருட சிறைத்தண்டனை என்ற சட்ட நடைமுறையை நீக்க வேண்டும் என இந்த தொழிற்சங்கங்கள் கூறியுள்ளன.

இதனால் மக்கள் அவர்களைப் பற்றி தான் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே ஜனாதிபதி ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்திக்கும்போது விடுபட்ட பயனாளிகளை மீள இணைப்பதற்கான அழுத்தத்தைக் கொடுப்போம்' என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# மகாபொல புரமைப்பரிசில் நன்கொடை இந்த வாரத்துக்குள் வைப்பிலிடப்படும்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

பல்கலைக்கழக மாணவர்களின் மகாபொல புலமைப்பரிசில் நிதி விநியோகிக்கப்பட்டுள்ளது. இந்த வாரத்துக்குள் மாணவர்களின் வங்கி கணக்குகளில் வைப்பிலிடப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களின் மகாபொல புலமைப்பரிசில் நிதி தொடர்பாக கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளவை வருமாறு -

பல்கலைக்கழக மாணவர்களின் மகாபொல புலமைப்பரிசில் நன்கொடைக்காக பணம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் தலையீட்டின் மூலம் அரசாங்கத்தால் 3100 லட்சம் ரூபா பணம் மகபொல புலமைப் பரிசில் நிதியத்தில் இருந்து அவ்வாறே மகாபொல புலமைப்பரிசில் நன்கொடைக்காக விநியோகிக்கப்பட்டுள்ளது.

குறித்த பணம் மார்ச் மற்றும் ஏப்ரல் ஆகிய இரண்டு மாதங்களுக்குமான புலமைப்பரிசில் நிதியாக மாணவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு இந்த வாரத்துக்குள் வைப்பிலிடப்படும். என்றுள்ளது. (05)

# துப்பாக்கி வெடித்ததில் 14 வயது சிறுவன் சாவு!

## மூன்று இளைஞர்கள் கைது

துப்பாக்கி வெடித்ததில் 14 வயது சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.


இந்தச் சம்பவம் வக்கரை வனப்பகுதியில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த சிறுவன் தனது உறவினர்கள் குழுவுடன் வேட்டையாடச் சென்ற போது அவர்கள் வைத்திருந்த துப்பாக்கி வெடித்ததில் குறித்த சிறுவன் உயிரிழந்துள்ளார் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் உயிரிழந்த சிறுவனுடன் வேட்டையாடச் சென்ற 24, 28 மற்றும் 32 வயதுடைய மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (02)

# ஹங்குரான்கெத்தவில் இளைஞர் தலையில் தாக்கப்பட்டு கொலை

## 8 பேர் சந்தேகத்தில் கைது



ஹங்குரான்கெத்த உடவத்தகும்புர பிரதேசத்தில் 22 வயதுடைய இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் எண்மர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் கண்டி குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 19ஆம் திகதி இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற காணித் தகராறில் குறித்த இளைஞர் தலையில் பலமாக தாக்கப்பட்டு கண்டி தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இந்த மோதலில் இளைஞனின் தந் தையும் பலத்த காயமடைந்து வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் கைது செய்யப்படவில்லை எனக்கூறி இருநூறுக்கும் மேற்பட்டோர் ஹங்குரான்கெத்த பொலிஸ் நிலையத்தைச் சுற்றிவளைத்து கலவரத்தில் ஈடுபட்டதால் அவர்களைக் கலைக்க பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டிருந்தனர்.

தாக்குதலின் பின்னர், பிரதேசத்தை விட்டுத் தப்பியோடி மறைந்திருந்த சந்தேக நபர்கள் கண்டி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்களில் ஒருவர் பெண்ணாவார். அவரது கணவர் மற்றும் மகனும் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். (05)

# கூரிய ஆயுதத்தால் யுவதி தலையில் தாக்கிய போதைப்பொருளுக்கு அடிமையானவர் கைது

## பிலியந்தலையில் சம்பவம்



கூரிய ஆயுதத்தால் யுவதி ஒருவரின் தலையில் தாக்கி காயப்படுத்திய நபரை பிலியந்தலை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் செவ்வாய்க்கிழமை பெலன்வத்த பகுதியில் இடம்பெற்றுள்ளது. குறித்த யுவதியின் தலையில் சந்தேக நபர் கத்தியால் தாக்கும் காட்சி சிசிரிவியில் பதிவாகியிருந்தது.

19 வயதுடைய யுவதியே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார். இவர் பணிக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பும்போதே சந்தேக நபர் இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

தாக்குதல் நடத்தியவர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் என பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர். (05)

# நெல்லுக்கு விலை நிர்ணயம் கேட்டு கிளிநொச்சியில் நேற்று ஆர்ப்பாட்டம்











உரியநேரத்தில் அரசாங்கம் நெல்லுக்கான குறைநந்தபட்ச விலையை அமுல்படுத்தப்படுத்த வேண்டுமெனத் தெரிவித்து கிளிநொச்சியில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம் நேற்று (புதன்கிழமை) காலை 9 மணியளவில் கரடிபோக்கு சந்தியில் ஆரம்பமானது.

கிளிநொச்சி இரணைமடு விவசாய சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நெல் சந்தைப்படுத்தல் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்ட பேரணி ஆரம்பித்து கிளிநொச்சி மாவட்ட செயலகம் வரை சென்றடைந்ததுடன், அங்கு விவசா-யிகள் தொடர்பில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

தற்பொழுது நெல் 48 தொடக்கம் 50 ரூபாவுக்கே கொள்வனவு நடைபெறுவதாகவும், ஆனால் தமக்கு அறுவடைமுடிவில் 85 ரூபா செலவினமாகக் காணப்படுவதாகவும்; விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

நெல் சந்தைப்படுத்தல் சபையினர் அவர்களின் களஞ்சியசாலைகள் அனைத்துமே வெறுமனே காணப்படுவதுடன், நெல் கொள்வனவு உரிய காலத்தில் உரிய விலையில் கொள்வனவு செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

இதன்போது மகஜர்கள் மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரீமோகன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனிடமும் கையளிக்கப்பட்டன. (05)

# ஹஜ் கற்றுத் தரும் பாடங்களை ஒழுகத் திடசங்கற்பம் பூணுவோம்

## கல்முனை முன்னாள் முதல்வர் ஆசி

(அகீல்)

ஹஜ் கற்றுத்தருகின்ற பொறுமை, சகிப்புத்தன்மை, தியாகம், அர்ப்பணிப்பு போன்றவற்றை எமது வாழ்வில் கடைப்பிடித்தொழுக திடசங்கற்பம் பூணுவோம் என கல்முனை மாநகர முன்னாள் முதல்வர், சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் விடுத்துள்ள ஹஜ் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச்செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

ஹஜ் கடமை என்பது முஸ்லிம்களிடையே எவ்வித பேதமுமில்லை என்கிற மிகப்பெரும் தத்துவத்தை உணர்த்துவதுடன் நமது தனிப்பட்ட அபிலாஷைகளை முற்றாக புறமொதுக்கி விட்டு இறைவனுக்கு அடிபணிதல் எனும் கொள்கையை மாத்திரம் கடைப்பிடிக்கின்ற இஸ்லாமியர்களாக, ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது.

எமக்குள் பலமாக இருக்க வேண்டிய ஐக்கியத்தை தொலைத்து விட்டு, கருத்து முரண்பாடுகளினாலும் பிளவுகளினாலும் எமது நாட்டில் மாத்திரமல்லாமல் உலகளாவிய ரீதியில் பல்வேறு பிரச்சினைகளுக்கும் அழுத்தங்களுக்கும் முகம்கொடுத்து, அல்லலுறுகின்ற எமது சகோதரர்களின் நிம்மதியான வாழ்வுக்காக இப்புனிதத் திருநாளில் எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்திப்போம்.

மேலும், இன்று ஹஜ்ஜுப் பெருநாள் கொண்டாடுகின்ற அனைத்து முஸ்லிம் சகோதரர்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். ஈத்முபாரக்.

# உணவு விசமானதால் 40 மாணவர் பாதிப்பு



உணவு விமடைந்தமையினால் 40 இற்கும் அதிக மாணவர்கள் சுகவீனமடைந்து மகா ஓயா ஆரம்ப வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். நேற்று (புதன்கிழமை) மகா ஓயா நில்லம்ப பகுதியில் அமைந்துள்ள பாடசாலை மாண வர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை குறித்த மாணவர்கள் உணவை உட்கொண்ட பின்னர் இவ்வாறு சுகவீனமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (05)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/-
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்

# ஓட்டோ உரிமையாளர்கள் பொத்துவிலில் போராட்டம்!











சுற்றுலாத்துறைக்கு புகழ்பெற்ற பிரதேசமான பொத்துவில் அறுகம்பை பகுதியில் மோட்டார் சைக்கிள்களில் நீர் சறுக்கல் படகுகளை ஏற்றிச் செல்வதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றது.

அறுகம்பை ஓட்டோ உரிமையாளர்கள் சங்கத்தால் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டம் அறுகம்பை பிரதான வீதியில் ஆரம்பிக்கப்பட்டு, ஆர்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பதாதைகளை ஏந்தியவாறு பேரணியாக பொத்துவில் பிரதேச செயலகம் வரை சென்றனர்.

மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் வியாபார நடவடிக்கைக்காக சுற்றுலாப் பயணிகளின் நீர் சறுக்கும் படகுகளை ஏற்றிச் செல்வதற்காக வாடகைக்கு விடுகின்றனர்,

இதனால் சுற்றுலாத்துறையை மாத் திரம் நம்பி தமது ஜீவனோபாயத்தை மேற்கொண்டு வரும்தாம்பாதிக்கப்பட்டுள்ளனர் என ஆர்பாட்டத்தில் கலந்துகொண்ட ஓட்டோ ஓட்டுனர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாகப் பொலிஸாருக்கு தெரிவித்தும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என ஓட்டோ உரிமையாளர்கள் சுட்டிக்காட்டினர்.

இதனாலேயே போக்குவரத்து பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் இந்த எதிர்ப்பு ஆர்பாட்டத்தை மேற் கொண்டுள்ளதாக தெரிவிக்கும் இவர்கள், மோட்டார் சைக்கிள்களில் பொருத்தப்பட்டிருக்கும் தாங்கிகளை அகற்றி வீதி விபத்துக்களிலிருந்து சுற்றுலாப்பயணிகளையும், மக்களையும் பாதுகாத்து தமது வாழ்வாதரத்தை மேற் கொண்டு செல்வதற்கு பொலிஸார் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் கோரிய மகஜர் ஒன்றை பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ.பிர்னாஸிடம் கையளித்தனர்.

(05)

# லங்கா சதொசவுக்கு 60 கோடி ரூபா நட்டம்

## கோப் குழு தகவல்

லங்கா சதொச நிறுவனத்திற்கு 2022 ஆம் ஆண்டில் மாத்திரம் அறுபது கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக கோப் குழு தெரிவித்துள்ளது.

லங்கா சதொச நிறுவனத்தின் செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக கோப் குழு தலைவரின் தலைமையில் நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே இந்த விடயம் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன் மனித பாவனைக்காக கொண்டு வரப்பட்டு கால்நடை தீவனத்திற்காக விற்பனை செய்யப்பட்ட அரிசியின் கையிருப்பு காலாவதியானதால் இந்த நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்காலத்தில் இது தொடர்பில் மேலும் கலந்துரையாட கோப் குழு தீர்மானித் துள்ளது. லங்கா சதொச நிறுவனத்துக்கு பொருத்தமான வர்த்தக மாதிரி ஒன்றை தயாரித்து அதனை இலாபகரமானதாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்தும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. லங்கா சதொச நிறுவனம் 2021 முதல் 2024 ஆம் ஆண் டிற்கான முறையான திட்டத்தைக் கொண்டுள்ள போதிலும் இதுவரையில் அவை அங்கீகரிக்கப்படவில்லை எனவும் கோப் குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார். இதனால், 2028 ஆம் ஆண்டு வரை விரிவான திட்டத்தை தயாரித்து, அதன் செயற்;பாடுகள் குறித்து 2 மாதங்களுக்குள் அறிக்கை அளிக்கும்படி அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக லங்கா சதொச நிறுவனத்தின் தலைவர்களை எதிர்வரும் ஒகஸ்ட் 22ஆம் திகதி மீள அழைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் கடல் நீரில் விளக்கெரியும் அற்புதம்



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் ஆடி குளிர்த்தி பொங்கல் வைபவத்தை முன்னிட்டு முருகப்பெருமானுக்கு கடல் நீரில் விளக்கு எரிக்கும் வைபவம் காலங்காலமாக இடம்பெற்று வருகின்றது.

இவ் வருட ஆடி குளிர்த்தி பொங்கலுக்கு ஒரு வாரத்துக்கு முன்னரான காலத்தில் முருகப்பெருமானுக்கு விசேட பூசைகள் நடத்தப்பட்டு இரவு 12 மணியளவில் ஆலய பூசகர்கள், பெருங் கடலும் தொண்டமானாறு வாவியும் இணையும் இடத்துக்;குச் சென்று வெள்ளை துணியினால் வாய்கட்டப்பட்ட மண் குடத்தில் கடல் நீர் எடுத்து வந்து விசேட பூஜை வழிபாடுகள் நடத்தி ஆலய மூலஸ்தானத்தில் வைத்து எதிர்வரும் திங்கட்கிழமை வரையான ஒரு வார காலத்துக்கு கடல் நீரில் விளக்கெரித்து பொங்கல் பொங்கும் சம்பிரதாயபூர்வ வைபவம் இடம் பெறவுள்ளது.

அந்தவகையில் திங்கட்கிழமை இரவு பெருங்கடலுக்குச் சென்று கடல் நீர் எடுத்து வந்து விளக்கு எரிக்கும் வைபவம் ஆரம்பமாகியுள்ளது. (05)

# தீவிர மந்த போசணை உடைய சிறுவர்களுக்கான கண்காட்சி!





தீவிர மந்த போசணை உடைய சிறுவர்களுக்கான போஷனை கண்காட்சியும், விழிப்புணர்வும் ஊட்டச்சத்து குறைபாட்டை நீக்க குழந்தைகளுக்கு எப்படி உணவளிக்க வேண்டும் என்ற தொனிப்பொருளில் விளக்கமளிப்பும் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.ஆர்.எம். அஸ்மி தலைமையில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் எம்.பி.எம். வாஜித் கலந்து கொண்டதுடன் கல்முனை பிராந்திய தாய் சேய் நல வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம். ரிஸ்பின் கலந்து கொண்டு சிறுவர்களுக்கான போஷனை தொடர்பிலும், உணவு விழிப்புணர்வு சம்பந்தமாகவும் ஊட்டச்சத்து குறைபாட்டை நீக்க குழந்தைகளுக்கு எப்படி உணவளிக்க வேண்டும் என்ற தொனிப்பொருளில் விளக்கமளித்தார்.

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், கர்ப்பிணி தாய்மார்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், பாடசாலை மாணவ மாணவிகள், பெற்றோர்கள் எனப்பலரும் இதில் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# குரோதங்களும், வெறுப்புணர்வுகளும் பிரதேசவாதங்களும் பகைமையுணர்வும் நீங்கி அன்பும் அரவணைப்பும் உருவாகுக

## கலாநிதி சிராஸ் மீராசாஹிப் ஹஜ் வாழ்த்து



தியாகத் திருநாளாம் ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடும் உலக வாழ் முஸ்லிம்கள் அனைவருக்கும் இதுல் அழ்ஹா ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இத்தியாகத் திருநாளில் மக்கள் மத்தியில் சாந்தி சமாதானம் சௌபாக்கியம் ஏற்பட எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் பிரார்த்திப்போமாக என்று கல்முனை மாநகர முன்னாள் முதல்வரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உச்சபீட உறுப்பினரும், மெற்றோபொலிட்டன் கல்லூரியின் தவிசாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தனது ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.

அவர் மேலும் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடுகையில் -

புனித ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடும் நாம் துல் ஹஜ் மாதத்தின் சிறப்பையும் அல்லாஹ்வின் வல்லமையையும் தியாகத்தையும் அது எமக்கு பயிற்றுவிக்கும் மானுட விழுமியங்களை நமது நடத்தை மாற்றங்களில் உயிர்ப்பித்து இம்மையிலும் மறுமையிலும் விமோசனம் பெற முயற்சிக்க வேண்டும்.

இன்று எமது நாட்டுமக்கள் பொருளாதார கஷ்டம் காரணமாக சொல்லொன்னா துயரத்தோடு தமது அன்றாட ஜீவியத்தை நடத்திச் செல்வதில் மிக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் இந்த நிலமை முற்றாக நீங்க இத்தியாகத் திருநாளில் இறைவனிடம் இருகரம் ஏந்தி பிராத்திப்போமாக!

இந்நாட்டில் முஸ்லிம்களின் கண்ணியம் பேணவும் மானிடப் பெறுமானங்களும் மனித மாண்புகளும் பாதுகாக்கப்படவும், எம்மிடையே காணப்படும் குரோதங்களும், வெறுப்புணர்வும் பிரதேசவாதங்களும் பகைமையுணர்வும் நீங்கி சகோதரத்துவமும் மனித நேயமும் மானுட உணர்வும் அன்பும் அரவணைப்பும் மனித பாசமும் மிகைக்கும் சூழ்நிலையொன்றுக்காக அல்லாஹ்வின் அன்பையும் அருளையும் நாடி நிற்கும் அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் இம்மை மறுமையிலும் சிறக்க. வாழ்வில் வளம் செழிக்க இதயம் கனிந்த ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்துத்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.
- என்றுள்ளது.
(05)

# "சமாதானம், சகோதரத்துவத்துக்கு எடுத்துக்காட்டு"

## சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் வாழ்த்து

(அகீல்)

"சமாதானம், சகோதரத்துவத்திற்குஎடுத்துக்காட்டான புனித ஹஜ் கடமையை நிறைவேற்றிய நிலையில் ஈதுல் அழ்ஹா ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடும் சகல முஸ்லிம்களுக்கும் எமது நல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்"

இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளரும், கட்சியின் உயர் பீட உறுப்பினரும், சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான ஐ.எல்.எம்.மாஹிர் விடுத்துள்ள ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச்செய்தியில் பணிப்பாளர் மாஹிர் மேலும் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"உடல், மற்றும் பொருள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியகடமையாகவே புனித ஹஜ் கடமை விளங்குகின்றது. உள்ளம் ஆசைப்படும் உயிரோட்டமான வணக்கமாகவுள்ள ஹஜ்ஜின் போது அங்கு சகோதரத்துவம் வெளிப்படுத்தப்பிடுகின்றது, சமாதானம் நிலவுகின்றது.

அன்பு பெருகுவதுடன், தேசம், இனம், மொழி நிற வேறுபாடுகளைக் களைந்து ஒரே விதமான வெண்ணிற ஆடை அணிந்து இறையில்லத்தில் கூடிதமது ஹஜ் கடமையை ஹஜ்ஜாஜிகள் நிறைவேற்றுகின்றனர்.

இஸ்லாமியர்களின் ஒற்றுமையை உலகிற்கு எடுத்துக்காட்டும் வகையிலும், பல உள்ளார்ந்த தத்துவங்களை எடுத்துக்காட்டும் வகையிலும் புனித ஹஜ் பயணம் அமைகின்றது.

எனவே, இத்தகைய தத்துவங்களின் அடிப்படையில் தான் முஸ்லிம்கள் தமது உலக வாழ்வை அமைத்துக்கொள்வதை இஸ்லாமும் விரும்புகின்றது.

இன்றைய புனித ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில் சன்மார்க்கம் காட்டும் நற்பாதைகளில் பயணிப்பதற்கும் குறிப்பாக சமத்துவம், சகோதரத்துவம், அமைதி பேணி நம் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் உறுதி பூணுவோம்.

இத்தியாகத்திருநாளில் ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடும் உலக வாழ் முஸ்லிம்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்"

எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உயரிய இலட்சியத்தை வெல்ல இறை தூதரின் குடும்ப செய்தி

## முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் வாழ்த்து



உயரிய இலட்சியங்களை வெல்வதற்காக இறைதூதர் இப்ராஹிமின் குடும்பத்தினர் செய்த தியாகங்கள், சவால்களை எதிர்கொள்வதற்கான தைரியங்களைத் தருவதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

புனிதஹஜ்ஜுப்பெருநாள் வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இறைதூதர் இப்ராஹிமின் இலட்சிய ங்கள்இ மனித வர்க்கத்துக்கு சிறந்த வழிகாட்டல்களாக உள்ளன. இடப்பெயர்வும் தியாகமும் என மிகப் பெரிய சவாலை வெற்றிகொண்ட நாகரீகங்களின் நாயகனாகவே இறைதூதர் இப்ராஹிம் திகழ்கிறார்.

ஏகத்துவத்தை நிலைநிறுத்த அவர் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் தியாகங்களை யூத மற்றும் கிறிஸ்தவ மதங்களும் ஏற்றுக்கொண்டுள்ளன. இஸ்லாம் இவரது குடும்பத்தியாகங்களைமார்க்கமாக்கி, ஹஜ்ஜை புனித கடமையாக்கியுமுள்ளது.

ஒரு குடும்பத்தின் முன்மாதிரிகள், உலகில் பல நாகரீகங்களையே தோற்றுவித்திருக்கிறது. இத்தகைய குடும்பத்தினராக வாழ்வதற்கு நாம் இந்நாளிலிருந்தாவது முயற்சிக்கவேண்டும். உழ்ஹிய்யா கடமையாக்கப்பட்டுள் நாட்களில், முஸ்லிம்கள் நடந்துகொள்ளும் விதம், ஏனைய சமூகத்தினருக்கு முன்மாதிரியாக அமையட்டும்.

மனிதவாடையே இல்லாத பண்டைய காலத்து மக்கா பாலைவனத்தில், அன்னை ஹாஜராவும் பாலகர் இஸ்மாயீலும் கற்றுக்கொண்டவை ஏராளம். இவர்களது தைரியம்தான் இன்று நாகரீகமாக பரிணமித்துள்ளது.

இறைவனின் ஏவல்களை எடுத்தியம்பிய இக்குடும்பத்தவர்களின் பக்குவம் வாழ்நாள் வரலாற்றுச் சான்றாகி உள்ளது - என்றுள்ளது.

# முஸ்லிம் காங்கிரஸ் பதில் பொருளாளர் யஹியாகானின் பெருநாள் வாழ்த்துகள்!



உலகவாழ் முஸ் லிம்களின் அனைத்து பிரச் சினைகளும் நீங்கி - அனைத்து சவால்களையும் தியாக சிந்தையோடு எதிர் கொள்ளும் ஆற்றலை அல்லாஹ் வழங்க வேண்டுமென இன்றைய 'ஈதுழ்;அழ்ஹா' பெருநாள் தினத்தன்று பிரார்த்திப்போம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பதில் பொருளாளர் ஏ.சி. யஹி யாகான் விடுத்துள்ள பெருநாள் வாழ்த்துச் செய்தி யில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

இறைதூதர்களானநபிஇப்ராஹிம்(அலை), நபி இஸ்மாயில் (அலை), அன்னை ஹாஜரா ஆகியோரின் தியாகத்தை பிரதிபலிக்கும் ஹஜ் கடமை என்பது தியாகத்தையும் சகிப்புதன்மையையும் அதிகம் வலியுறுத்தும் இறுதிக் கடமையாகும்.

இலங்கைமுஸ்லிம்கள்-இந்தநாட்டுக்காக ஆற்றிய அனைத்துவகையானதியாகங்களும் போற்றுதலுக்குரியது.

இந்த வருடம் குர்பானி கொடுப்பதில் சில இடங்களில் சில பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. அவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை வெளியிட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தியாகத்தை வலியுறுத்தும் இந்நாளில் தியாகத்தையும் சகிப்புத் தன்மையையும் கடைப்பிடித்து இப் பெருநாளை கொண்டாடுவோம்.

உலகவாழ் முஸ்லிம்கள் அனைவருக்கும் எனது இனிய பெருநாள் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். (05)

# பெண் மீது பிலியந்தலையில் கோரத் தாக்குதல்

பிலியந்தலைப் பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளம் பெண் ஒருவர் படுகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

பிலியந்தலை, அரவ்வல, சமகி மாவத்தை, பெலன்வத்த பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

19 வயதுடைய குறித்த இளம் பெண், பணிக்கு சென்றுவிட்டு வீடு திரும்பும் போதே இந்த சம்பவத்திற்கு அவர் முகம் கொடுத்துள்ளார்.

40 வயதான சந்தேக நபர் ஒருவராலேயே இந்தச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், குறித்த நபர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் எனவும் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண்ணின், தந்தையுடன் ஏற்பட்ட தகராறு காரணமாகவே இந்தத் தாக்குதல் சம்பவம் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலில் குறித்த இளம் பெண்ணின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாகவும் தற்போது அவர் ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்ணைத் தாக்கிய நபர் செவ்வாய்க்கிழமை மாலை தொலைபேசி கோபுரம் ஒன்றில் ஏறியிருந்த போது பிலியந்தலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (05)

# போதைப் பொருளுடன் ராணுவ கோப்ரல் கைது

ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த இராணுவ சிப்பாய் ஒருவர் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார் என காலி பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நாகொட பிரதேசத்தை சேர்ந்த 31 வயதான லான்ஸ் கோப்ரல் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கொஸ்கொட லலிஹெட்டுவ பிரதேசத்தில் வைத்து ஒருவர் செவ்வாய்க்கிழமை இரவு 10 மணியளவில் சந்தேகத்தின் பேரில் கொஸ்கொட பொலிஸாரால் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (05)

# அஸ்வெசும கொடுப்பனவில் உள்வாங்ககோரி முல்லைத்தீவிலும் போராட்டம் முன்னெடுப்பு

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவில் தங்களையும் உள்வாங்குமாறு கோரி முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மக்கள் கவனவீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட உடையார் கட்டு சமுர்த்தி வங்கிக்கு முன்னால் நேற்று (புதன்கிழமை) காலை குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஏழைகள் வாழ்வில் ஏழனம் செய்யாமல் எங்களை உள்வாங்கு, அரசே அஸ்வெசும திட்டத்தில் அனைவரையும் உள்வாங்கு' போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு குறித்த கவனவீர்ப்பு போராட்டம் முன் னெடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து புதுக்குடியிருப்பு பிரதேசசெயலாளரிடமும் முல்லைத்தீவுமாவட்டபதில் அரசாங்க அதிபரிடமும் இது தொடர்பாக கோரிக்கை அடங்கிய மனுவொன்றும் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.06.2023இல் வெளியிடப்பெற்றது.